ௐ

பராதேவி துணை

# வேதாந்தப்பாட்டுகளும் தினஸரி ஸ்தோத்திரங்களும்

670

**R. S. S. அம்மாளால்**

பிரசுரிக்கப்பட்டது.

OFFICE OF THE [illegible] REGISTRAR OF BOOKS
16 DEC 1954
MADRAS

17 FE
MAD

[பதினாறாம் பதிப்பு]

**1954.**

**Price As. 0-8-0]** **[விலை அணு 0-8-0**

# தமிழில் பாணிசிரிஸ் புத்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | யஜுர்வேத ஸந்தியாவந்தனம்-தர்ப்பணம் | அணா 2½ |
| 2. | ருக்வேதம் ஷை | ,, 2½ |
| 3. | ஸ்யாமளா தண்டகம் | ,, 1 |
| 4. | முகுந்தமாலை | ,, 2 |
| 5. | ஸாமஸந்தியாவந்தனம் தர்பபணம் முதலியன | ,, 2½ |
| 6. | ஸ்தோத்ரமாலா அல்லது ஸ்துதிமஞ்சரி | ,, 4 |
| 7. | கல்பத்ரயம்-(விநாயகர் ஸரஸ்வதி வரலக்ஷிமி) | ,, 5 |
| 8. | விஷ்ணு ஸகஸ்ரநாமம் | ,, 7 |
| 9. | சுப்ரமண்ய புஜங்கஸ்தோத்ரம் முதலியன | ,, 2 |
| 10. | லக்ஷ்மி ஸகஸ்ரநாமம் | ,, 7 |
| 11. | லலிதா ஸகஸ்ரநாமம் | ,, 7 |
| 12. | சுப்ரமண்ய பூஜாவிதி | ,, 4 |
| 13. | புருஷ சூக்தம் முதலியன | ,, 2 |
| 14. | இந்திராக்ஷி சிவகவசம் | ,, 2½ |
| 15. | ஆதித்யஹ்ருதயம் (அர்த்தத்துடன்) | ,, 2½ |
| 16. | ஸௌந்தர்யலஹரி **100** ஸ்லோகங்கள் | ,, 2½ |
| 17. | பஜகோவிந்தம் கோபிகா கீதை | ,, 1 |
| 18. | சுப்ரமண்ய ஸகஸ்ரநாமம் | ,, 8 |
| 19. | லக்ஷ்மி அஷ்டோத்திரம்-அர்த்தத்துடன் | ,, 2½ |
| 20. | சிவானந்த லஹரி **100** ஸ்லோகங்கள் | ,, 2 |
| 21. | யஜுர் உபாகர்மம் | ,, 2 |
| 22. | நவக்ரஹஸ்தோத்ரம் | ,, 3 |
| 23. | பூஜ்ராமாயணம் நாமராமாயணம் | ,, 1 |
| 24. | அகிலாண்டேச்வரி அக்ஷரமாலிகா | ,, 1½ |
| 25. | யஜுஸ் ஸந்தியா பாஷ்யம் | ,, 5 |
| 26. | சங்கராந்தி பூஜை- கோபூஜை | ,, 2½ |
| 27. | மார்க்கபந்து ஸ்தோத்ரம் | ,, 2 |
| 28. | நித்யான்னிகம் | ,, 8 |
| 29. | ஸதாசிவ கீர்த்தனங்கள் | ,, 1 |
| 30. | அஷ்டபதியும், கீதகோவிந்தமும் | ,, 5 |
| 31. | விஷ்ணு பாதாதி கேசாந்த ஸ்தோத்திரம் | ,, 2 |
| 32. | தேவிநித்ய பாராயணம் | ,, 10 |
| 33. | தேவிகட்கமாலா நாமாவளியுடன் | ,, 1½ |
| 34. | அஷ்டோத்ர கதம்பம் | ,, 9 |
| 35. | மஹிஷாசுர மர்த்தனி ஸ்தோத்திரம் | ,, 1 |
| 36. | லலிதா திரிசதி | ,, 4 |

CONNEMARA LIBRARY
17 FEB 1955
MADRAS

# முகவுரை

ஸம்ஸ்க்ருத ஞானமும் அதிக கல்வியறிவும் இல்லாத நம் தமிழ் நாட்டுப் பெண்மக்கள் வேதவேதாந்தங்களின் ஸாராம்சத்தை எளிய விதத்தில் தெரிந்துகொள்ளும்படி பெரியவர்களால் பாடப்பட்ட சில வேதாந்தப் பாடல்களும், ஸம்ஸாரத்தில் இருந்துகொண்டு, கணவன் பெரியவர்கள் குழந்தைகள் இவர்களுக்குப் பணிவிடை செய்து கொண்டிருக்கும் ஸ்திரீகள் தங்கள் தினசரி கடமைகளை, பற்றின்றி, கடவுளுக்கு அர்ப்பணமாகச் செய்வதற்கு அனுகூலமாய் அறிவுறுத்தும் தினசரி ஸ்தோத்திரப் பாடல்களும் இந்தப் புத்தகத்தில் சேர்ந்திருக்கின்றன.

காலையில் படுக்கையைவிட்டு எழும்பொழுது பகவானுடை அருமையான பல பெயர்களைச் சொல்லியும் அவரது அம மிருந்த அவரது பக்தர்கள் முக்தர்களையும் நினைத்தும் துதி இதிலுள்ள முதற் பாடலை உதய ராகத்தில் பாடுவார்கள் ந பெரியவர்கள். சுறுசுறுப்பும் மனத்தெளிவுமுள்ள அதிகாலையி கடவுளைத் தியானம் செய்வதும் மகா ரிஷிகளையும் பெரியோர்களையும் நினைத்து ஸ்தோத்திரம் செய்வதும் அந்த நாள் முழுவதும் நமக்கு சந்தோஷத்தையும் மனசாந்தியையும் ஊக்கத்தையும் உண்டாக்கும்.

பிறகு, நதிஸ்தோத்திரங்களைச் சொல்லி ஆற்றிலோ அல்லது குளத்திலோ ஸ்நானஞ்செய்து அங்குள்ள த்ரிமூர்த்திஸ்வரூபமான அச்வத்த விருக்ஷத்தை அதன் ஸ்தோத்திரத்தைச் சொல்லிக்கொண்டு பலதரம் வலம் வருவார்கள். பிறகு, சூரியநாராயண ஸ்தோத்திரத்தைச் சொல்லிக் கொண்டே வீடு சேர்ந்து மடியுடுத்தி நெற்றிக்கு குங்குமம் திருநீறு இட்டு துளஸி மாடத்தின் எதிரில் மெழுகிக் கோலமிட்டு துளஸியம்மன் ஸ்தோத்திரத்தைச் சொல்லி ஸ்துதித்து பூஜிப்பார்கள். அதன்பின், மானஸிகபூஜை முதலியவற்றால் பகவானைத் தியானம் செய்துகொண்டே சமையல் முதலிய வேலைகளைச் செய்து வீட்டிலுள்ள பெரியோர்கள் குழந்தைகள் முதலியவர்களுக்குப் பணிவிடை புரிந்து போஜனமளித்துத் தானும் புஜித்துத் தாம்பூலம் முதலிய வற்றால் புருஷனை உபசரித்து சிரமபரிகாரம் செய்து கொள்வார்கள். பிற்பகலில் இதிஹாஸ புராணங்களின் சம்பந்தமாகிய இராமாயணம், குசலவ வாக்கியம் அனந்தங்காடு பார்வதியம்மன் சோபனம் முதலான மனப்பாடமாயிருக்கும் பாடல்களைச் சொல்லியோ சொல்லச் சொல்லிக் கேட்டோ ஆனந்தமடைவார்கள்.

R.B. No 670



அஸ்தமன வேளையில் திருவிளக்கேற்றி வைத்து அதன் ஸ்தோத்திரத்தைச் சொல்லி ஸ்துதித்து சேவித்தெழுந்து பக்தி பண்ணுவார்கள். இப்படியாக ஸம்சாரத்திலிருந்து வேலைகளைச் செய்து கொண்டே கிருஹத்தை மங்களகரமாய் வைத்துக் கொண்டு மனது விச்ராந்தியடையும்படியாய் உத்தமிகளான நமது ஸ்திரீகளுக்குக் கருணாநிதியாகிய பகவான் அருள்புரிவாராக. மரா மரா வென்ற வேடனுக்கும் வாசி வாசி யென்ற பக்தனுக்கும் முக்தி கொடுத்த தெய்வம் இப்படித் திரிகரண சுத்தியோடு மனப்பூர்வமாய் தினந்தினம் பலவழிகளாலும் கடவுளைத் தொழுது பக்தி பண்ணும் பேதமையான பெண்மணிகளுக்கு "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்றபடி நற்கதியளிப்பதிற் சந்தேகமில்லை.

இக்காலத்து நவீன நாகரிகத்தில் மறைந்து போய்க்கொண்டிருக்கும் அநேக நற்கருமங்களைப்போல அல்லாமல் என் சகோதரிகள் அநேகமாய்ப்படிக்கத் தெரிந்தவர்களாகையால் இந்தப் பாடல்களை மனப்பாடஞ்செய்து சத்கர்மங்களைப்புரிந்து பரதேவியின் அருளுக்குப் பாத்திரர்களாவார்களாக.

ஓம் சுபம்.

V. S. V. அம்மாள்.

51760
1985

**இந்த பக்திமார்க்கமான பாடல்களை**
ப்ாராயணம் செய்துகொண்டு
பக்தியுடன் இருந்த மகா சாத்விகமான
என் பாட்டி அம்மாள்
**அம்மணி என்னும்**
**லக்ஷ்மி அம்மாளுக்கு**
இதை சமர்ப்பிக்கிறேன்.

**V. S. V.**

Copyright belongs to R. S. S. Ammal.

CONNEMARA PUBLIC LIBRARY
17 FEB 1955
MADRAS
51760
O82:417x
3154

உ

பரதேவி துணை

# வேதாந்தப் பாட்டுகளும் தினஸரி ஸ்தோத்திரங்களும்

VETANTAP PADDUKALUM TINACARI STOTTIRANGALUM

## பக்தாள் முக்தாள் மூவர்தேவர்களின் ஸ்தோத்திரம்

உதய ராகம் மெட்டு.

1 ஆதிகணபதி ஆறுமுகரை அம்பிகைமணவாளரை
காலபைரவர் நந்திகேஸ்வரர் வீரபத்திர தக்ஷிண
மூர்த்தியை தியானித்தெழுந்தேன்.

2 சேஷகிரிவளர் வெங்கடேசரைத் திருமகள்
அலமேலுவை
தேவி சரஸ்வதி சதுர்முகப் பிரும்மா ஸ்ரீ பூமிதேவி
யம்மனே

3 பிராணதாரக மாகவிளங்கிடும் பரிபூர்ணகாவேரி
யம்மனே
ஆதிகங்கையை அறுபத்தாறுகோடி அகிலபுவனத்
தின் தீர்த்தத்தை

4 மத்ஸ்யகூர்மவராகநரசிங்க வாமனவதாரமூர்த்தியை
வீரபரசுராமபலபத்திர ஸ்ரீராமக்ருஷ்ணபௌத்தரை

5 ஸ்ரீ ஹரிதிருமார்பில் விளங்கிடும் ஸ்ரீ துளஸிமஹா தேவியை
ஜனகன் திருமகள் பிராணநாதரை ஸ்ரீபரதலக்ஷ்மண சத்துருக்கினரை

6 ஆதிசக்தியை லக்ஷ்மிசரஸ்வதி ஸாவித்திரி காயத் திரியம்மனை
அகலிதுரோபதை சீதைதாரையைமண்டோதரி ஐந்துபேர்களை

7 தேவகி குந்தி சுபத்திரை ருக்மிணி சப்தரிஷிகளின் தேவியை
தசரதர் தேவி கௌஸல்யையுடன் சிறந்த உத்தமி மார்களை

8 அயிராணியுடன் ஸுரகன்னிகளை ஐராவதம் உச்சை சிரவஸ
அருமையாகிய் காமதேனுவை அடர்ந்த கற்பகச் சோலையை

9 அஷ்டதிக்குப்பாலர் அவர்கள் தேவியை அஷ்ட வஸு அஷ்ட கஜங்களை
சித்தர் கின்னரர்கிம்புருடரை சிறந்தவித்யாதரர்களை

10 வசிஷ்டர் வர்மதேவர் காச்யபர் அகஸ்தியர் அத்ரி ஆங்கீரஸை,
புலஸ்தியர்கிரது புலகர் முதலான தவசிலாக்ய மகான்களை

11 வேதவியாசரை மார்க்கண்டேயரை விஞ்ஞான நாரதரை
சூதர்சவுநகர் துர்வாசமுனி ஜடபாதர்ஜரத்காருவை

12 மதங்கமாமுனி ரிச்யசிருங்கரை மகரிஷிசரபங்கரை
பிருகுமகாமுனி கௌதமரிஷிபேர்பெற்ற விஸ்வா மித்ரரை

13 ஸனகாதிகளை ஜனகராஜரை சுகருடன்சதானந்தரை
வைஸம்பாயனர் ஸுமந்துஜைமினி பைலவர் ஜாபாலி [ஸ்ய

14 கபிலரிஷியுடன் தத்தாத்திரேயரை கற்கிபாரத்
துவாஜரை
ஹயக்கிரீவரைப்பிரகஸ்பதிகுரு ஆதிசங்கராசாரியை

15 பத்மபாதரை அஷ்டகோணரை புகழ்பெற்ற ராமா
னுஜரை
ஸ்ரீ தளாசாரி ஸ்ரீ கோவிந்தரை சிறந்த மத்வாசாரி
யை

16 அகிலபுவனத்தை காத்துரக்ஷிக்கும் அஷ்டலக்ஷ்மி
நாதரை
அனுமார் பெரியதிருவடியுடன் ஆழ்வார்கள் பன்னி
ருவரை

17 பரமபக்தனும் ருக்மாங்கதன் துருவன் பக்தனும்
பிரகலாதனே
பக்திசெய்திட்ட குசேலர் அம்பரிஷன் பீஷ்மர்
விதுரர் பாஞ்சாலியை

18 ஆதிமூலத்தைக் கூவியழைத்திட்ட அறிவுமிகுந்த
கஜேந்திரனே
ஹரனை த்துதிசெய்த பாணராவண பிருங்கிசண்டி
கேசபக்தரை

19 அப்பர் சுந்தரர் ஞானசம்பந்தர் அறுபத்துமூவர்
தங்களை
ஜயதேவருடன் துளசிதாஸரை ஹரிசிறந்த பக்தி
மான்களை

20 பக்தர் குழாங்களை பகவான் மூவரை பாரிலுள்ள
புண்யநதிகளை
ஏற்றித்தொழுதிட்டேன் ஹிருதயசுத்தியுடன் போற்
றினேன் புகழ் பாடினேன்

21 உதயகாலத்தில் உள்ளம் தெளிந்துநான் ஹிருதயத்
தில்பரதேவியின்
பாதகமலத்தை தியானம்பண்ணியே பவக்கடல்
கடந்தேறினேன் தியானித்தெழுந்தேன்

ஓம்—தத்—ஸத்—பிரம்மார்ப்பிதம்

———

# தர்மராஜாவுக்கு நாரதரிஷி உபதேசித்த நதிஸ்தோத்திர சுலோகம்.

---

1 நதிஸ்தோத்திரம் பிரவக்ஷ்யாமி ஸர்வ பாபப்பிரணு
பாகீரதிவாரணுஸி யமுனு ஸ்ரீ ஸரஸ்வதி [ஸினீம்

2 பல்குணிசோணபத்ராச நர்மதா கண்டகி ததா
கயாப்பிரயாக சரயு த்ருவேணி மணிகர்ணிகா.

3 கிருஷ்ணவேணி பீமநதி கௌதமி பாபநாஸினி
அவனுசி அயோத்யா கங்கா துங்கபத்ரா மலாபஹா

4 காவேரி ஸிந்து கபிலா தாம்ரபர்ணி ஹரித்முகா
குமுத்வதி ஹேமவதி கிருதமாலா ஹரத்முகா

5 மஞ்சரி தபதி சைவஸீதா அளகநந்தினீ
சித்தாத்ரி கிரிஸிம்ஹாத்ரி புண்டரீகஸமுத்பவம்

6 சுவாமி புஷ்கரணீசைவ நித்தியபுஷ்கரணீ ததா
சந்திரபுஷ்கரணீசைவ ஹேமபுஷ்கரணீ ததா

7 காலேஸ்வரீம் வேகவதீம் கோமுகம் கோமதீநதீம்
கௌமோதகீம் குருக்ஷேத்ரம் பதரி துவாரகி ததா

8 சாளக்கிராமஞ்ச கேதாரம் நரநாராயணுச்ரமம்
பிருந்தாவனஞ்ச மதுரா ஹரித்துவாரஞ்ச கோகுலம்

9 கனகாசலஞ்ச கைலாஸம் ஹிமயம் சக்ரவாளகம்
கவிஞ்சபாதம் வேதபாதம் நந்திபாதஞ்ச ஸங்கதீம்

10 அகோபலம் ஜகன்னுதம் வெங்கடாகிரி ஸங்கதீம்
அயோத்தியா சேது மதுரா ஸ்ரீ முஷ்ணம் ரங்கமந்தி
[ரம்

11 ஸ்ரீ காகுளஞ்ச ஸ்ரீ கூர்மம் பாண்டுரங்கம் கபிஸ்தலம்
புஷ்பாகரம் ததா காஞ்சி அனந்தஞ்ச ஜனர்த்தனம்

12 பஞ்சக்ஷேத்திரம் ஹஸ்திகிரீம் ஸ்வேதாத்ரி விருஷ
பாசலம்
அவந்திம்ங்கரீம்மாயா ஸ்ரீ சைலம் கும்பகோணகம்

13 க்ஷீராப்திகிருஷ்ண தீர்த்தஞ்ச தக்ஷிணத்துவாரகி
[ததா
ஸுப்ரமண்யம் விரூபாக்ஷம் ருத்ரபாதாஞ்சநூபுரம்

14 பம்பாதீரம் ஸ்துதிபதிம் காலஹஸ்தீமகாநதீம்
கன்யாகுமாரீவேதபுரீம் காச்மீரம் சித்ரகூடகம்

15 சங்கரநாராயணஞ்சைவ வைகுண்டம் பாபநாசனம்
வேதாரண்யம் பஞ்சநதம் கௌரீமாயூர தர்சநம்

16 சாயாவனஞ்ச ஸ்ரீவர்ஞ்சியம் ஸ்ரீநிவாசம் நிவாஸிதம்
ஆதிநாத ஜகத்விந்தம் காலமேகம் சகுந்தலம்

17 ஹாலாஸ்யநகரீம் திருஷ்ட்வா அதிபாப விமோசனம்
பிரஹ்மோபேந்திரகிரிஞ்சைவ கோமதீவைஷ்ணவீம்
[ததா

18 நாரதீயமிதிஸ்தோத்ரம் நதிஸ்தோத்ராணி ஜீவக:
பிராதக்காலேபடேந்நித்தியம் ஸ்நானகாலே விசேஷ
[த:

19 கோடிஜன்மகிருதம்பாபம் விஷ்ணுஸாயுஜ்யமாப்னு
[யாத்
பூர்வே கங்கா படேந்நித்யம் தக்ஷிணேயமுனே ததா

20 பச்யமே நர்மதைநித்யம் உத்தரேஸரயூததா
ஆக்னேயம் தாமபிரபர்ணீச நிருதியாந்தஸரஸ்வதி

21 வாய்வாம் துங்கபத்ராச ஈசான்யம்கண்டகீததா
மத்யே காவேரிகா புரோக்தம் ஸ்நானமித்யாதி ஆச
[ரேத்.

இதி ஸ்ரீநதிஸ்தோத்திரம் ஸம்பூர்ணம்.

ஓம்—தத்—ஸத்

---

# அஸ்வத்தவிருக்ஷ ஸ்தோத்ரம்.

## சுலோகம்.

1 மூலதோபிரம்மரூபாய மத்யதோவிஷ்ணுரூபிணே
அக்ரதச்சிவரூபாய விருக்ஷாராஜாயதே நம:

2 மூந்திமுதலில் முளைத்தாய் நமோநம:
மூவுலகமுஞ் செழித்துத் தழைத்தாய் நமோநம:
பக்தியுள்ளோர்க்கருளும் பகவன் நமோநம:
இச்சையுடன் வரமளிக்கும் எந்தாய் நமோநம:

3 வாழ்மரத்துமன்னு வளமையுடையவரே
காயித்திரியின் பொருளே கண்மூன்றுடையவரே
சோலையழகரே சொல்லுக்கெட்டாதவரே
அல்லலுற்ற பக்தருக்கு அபயம் கொடுப்பவரே

4 அருந்தபஸிபக்தருக்கு அபயம் கொடுப்பவரே
ஆரூர் அரங்கம் அழகுதிருக்காவேரி
சோலைவளமையுள்ள திருக்குடந்தைமாநகரும்
நதிக்கரைகள் தோறும் நிறைந்து நின்றநாயகரே.

5 (உம்ம) வேரில்விளங்கும் விஷ்ணுவை நான் பணிந் [தேன்
அடிமரத்திலே விளங்கும் அச்சுதரைப் போற்றி [செய்தேன்
கொம்பில் விளங்குகின்ற கோவிந்தரைப் பணிந் [தேன்
பக்கத்தில் ஜோதிவிடும் பானுவைப் போற்றுகின் [றேன்

6 சுற்றும் பிரகாசிக்கும் சூரியனைக் கைதொழுதேன்
நடுவில் விளங்குகின்ற நாரணரை நான்பணிந்தேன்
இலையில் செழித்திருக்கும் ஹிருஷிகேசரைத் தொழு [தேன்
பூவிலே தோன்றும் புருஷோத்தமரைப் பணிந்தேன்

7 பிஞ்சிலே காணும் பெருமானைக் கைதொழுதேன்
காயிலேதோணும் கமலநா தரையும்கைதொழுதேன்
பழத்தில் விளங்கும் பத்மநாபர் பாதம் பணிந்தேன்
விதையில் விளங்கும் விச்வமூர்த்தியடிவணங்கி

8 ஆவாகனங்கள் பண்ணி அர்ச்சித்தேன் வாழ்வரசை
சுற்றிப்பிரதக்ஷிணமாய் இருவரசை போற்றி
செய்தேன்
பக்குவமாய்ப் பழங்கள்வைத்து பக்தியுடன் பூஜை
செய்தேன்
புஷ்பங்களைச் சொரிந்து போற்றிநமஸ்கரித்தேன்

9 மஞ்சளுடன் குங்குமமும் மணக்கும் நல்ல சந்தனமும்
தாம்பூல சொர்ண புஷ்பம் திருவடியிலே செர்ரிந்
தேன்
வளமையுள்ள வாழ்வரசின் மலரடியில் நான் பணிந்
தேன்
அடுத்தாற்கரசே அடைந்தோர்க்குக் கற்பகமே

10 புவனம்பிழைக்கவந்த புண்ணியவாழ்மரமே
வேம்புக்குநாயகரே விருக்ஷத்தின் ராஜாவே
திருமூர்த்தியாய் விளங்கும் செழிப்புடைய பேராசே
பரதேவி தன் அருளால் பாக்யத்தைத் தாருமையா

ஓம்—தத்—ஸத்—பிரம்மார்ப்பிதம்.

---

## ஸ்ரீதுளசியம்மன் ஸ்தோத்திர வாக்கியம்.

1 ஸ்ரீமத் துளஸியம்மா திருவேகல்யாணியம்மா
வெள்ளிக்கிழமை தன்னில் விளங்குகின்ற மாதாவே
செவ்வாய்க்கிழமை செழிக்கவந்த செந்திருவே
தாயாரேயுந்தன் தாளிணையில் நான் பணிந்தேன்

2 பச்சைப்பசுமையுள்ள துளஸீநமஸ்தே
பரிமளிக்கும் மூலக் கொழுந்தேநமஸ்தே
அற்பப்பிறப்பைத் தவிர்ப்பாய்நமஸ்தே
அஷ்டஐஸ்வர்யம் அளிப்பாய்நமஸ்தே

3 ஹரியுடையதேவி அழகீ நமஸ்தே
அடைந்தார்க்கு இன்பம் அளிப்பாய் நமஸ்தே
வனமாலை யென்னும் மருவேநமஸ்தே
வைகுண்டவாஸியுடன் மகிழ்வாய் நமஸ்தே

4 அன்புடனே நல்ல அருந்துளஸி கொண்டுவந்து
மண்ணின் மேல்நட்டு மகிழ்ந்துநல்ல் நீரூறறி
முற்றத்தில் தான்வளர்த்து முத்துப்போல் கோல
மிட்டு
செங்காவிசுற்றுமிட்டு திருவிளக்குமேற்றிவைத்து

5 பழங்களுடன் தேங்காயும் தாம்பூலம் தட்டில்வைத்து
புஷ்பங்களைச்சொரிந்து பூஜித்தபேர்களுக்கு
என்னபலனென்று ஹ்ருஷிகேசர் தான்கேட்க
மங்களமான துளஸி மகிழ்ந்துரைப்பாள்

6 மங்களமாய் என்னை வைத்து மகிழ்ந்துஉபாஸித்
தவர்கள்
தீவினையைப்போக்கிச் சிறந்தபலம் நானளிப்பேன்
அரும்பிணியைநீக்கி அஷ்டஐஸ்வரியம் நானளிப்
[பேன்
தரித்திரத்தைநீக்கி செல்வத்தை நான் கொடுப்பேன்

7. புத்திரனில்லாதவர்க்கு புத்திரபாக்யமளிப்பேன்
கன்னிகைகள் பூஜைசெய்தால் நல்லகணவரை
கூட்டுவிப்பேன்
கிரகஸ்தர்கள் பூஜைசெய்தால் கீர்த்தியுடன் வாழ
வைப்பேன்
முமுக்ஷுக்கள் பூஜை செய்தால் மோக்ஷபதம்
கொடுப்பேன்

8 கோடிகாராம்பசுவை கன்றுடனே கொண்டுவந்து
கொம்புக்குப் பொன்னமைத்து குளம்புக்கு வெள்ளி
கட்டி

கங்கைக்கரை தனிலே கிரகணபுண்யகாலத்தில்
வாலுருவி அந்தணர்க்கு மகாதானஞ்செய்தபலன்

9 நானளிப்பேன் சத்தியமென்று நாயகியுஞ்சொல்ல
லுமே
அப்படியே ஆகவென்று திருமால் அறிக்கை
யிட்டார்
இப்படியே அன்புடனே சற்றித்தொழுவார்கள்
அற்புதமாய் வாழ்ந்திடுவார் பரதேவி தன்னருளால்.

ஓம்—தத்—ஸத்—பிரம்மார்ப்பிதம்.

---

## ஸூரியபகவான் ஸ்தோத்திரம்.

1 கடலில் உதித்துவரும் கதிரவனை ஸ்தோத்தரிக்க
அலைகடலின் மேலெழுந்த ஆதியைப் பூஜைபண்ண

2 ஆனைமுகவா அறுமுகவா முன்வருவீர்
திவாகரனுர் கீர்த்திகளைச் சற்றேதெரிந்துரைக்க

3 நான்முகனுர் தேவியரே நாவில் வரவேண்டுமம்மா
புகழுடையபாரதியே புஸ்தகத்தில்வாழ்பவளே

4 சதுர்வேதசாஸ்த்திரத்தின் தத்துவத்தின் உள்பொ
[ருளே
தத்துவத்தின் மெய்ப்பொருளே ஸரஸ்வதியே முன்
[வருவீர்

5 கிழக்கில்உதித்துவரும் கீர்த்தியுள்ளமெய்ப்பொருளே
அடியேன் வினையகற்றி ஆட்கொள்ளவேணுமையா

6 தொட்டிலின்பிள்ளை சிசுக்கள் பிழைசெய்துவிட்டால்
பிழையாகவெண்ணிப் பெற்றதாய் தள்ளுவளோ

7 அப்படிப்போலெண்ணி அடியேன்வினையகற்றி
அஞ்சாமல் காத்தெனக்கு ஐக்கியபதம் தாருமையா

8 கதிரவனே மெய்ஞ்ஞானக் கண்கள் தரவேணுமையா
ஜோதிசுயம்வடிவே சுத்தவெளியானவரே

9 சித்தவெளியானவரே என்ஜோதி வெளியாக்குமை
[யா
சிஷ்யாள் மனதில் உதிக்கும் திவாகரரே

10 உண்டென்றூர் பங்கில் உரையும் பரஞ்சோதி
இல்லையென்றபாமரர்க்கு எட்டாத வஸ்துவே

11 ஜகத்திற்கதிபதியே சூரியநாராயணரே
உலகிற்கொருவரென்று உம்மையன்றோ சொல்லி
[டுவார்

12 பிருதிவி ஏழுகடலும் பிரத்யக்ஷமாய்விளங்கும்
பிரத்யக்ஷதேவதையே (உம்) பாதஞ் சரணமையா

13 இரக்ஷிக்கும் தேவதையே (உம்ம) இணையடியைப்
[போற்றி செய்தேன்
என்னுடைய ஜன்மத்தை ஈடேற்றவேணுமையா

14 (நான்) மாயைவலையில் மறித்துவந்து சிக்காமல்
பிறவாதமோக்ஷபதம் தாரீர்பெருமாளே

15 உலகிலுள்ளமானிடர்கள் உய்யும்வழிகாட்டவென்று
கதிரவனைப்பூஜித்து கடைத்தேரவேணுமென்று

16 சூரியனைப்பூஜித்தார் ஸுந்தரிகள் மூவருமாய்
அன்னையெனும்பார்வதியும் அதிகாலையிலெழுந்து

17 ஈஸ்வரியாள் வந்தாள் இலக்ஷுமியின் தன்மனைக்கு
பார்வதியாள் நல்வரவைப் பார்த்து மகாலக்ஷுமியும்

18 (தன்) வண்டார்குழலசைய மாலைபுரண்டசைய
சீராச்சிலம்பார்க்கச் செங்கைவளை ஜோதிவிட

19 கழுத்துப் பதக்கமின்னக் கங்கணங்கள் ஜோதிவிட
மங்கைஉமையவளின் மலரடியிலேபணிந்தாள்

20 தண்டனிட்ட லக்ஷுமியை தேவிகண்டு அன்புடனே
மாதவனார்மார்பில் பிரியாமல்நீவஸித்து

21 வாழ்ந்திருக்கவென்று மங்கைஉமை வாழ்த்திவிட்டு
காலையில்சென்றேநாம் கங்கை தன்னில்நீராடி

22 இமயகிரிமேலெழுந்த இளங்கதிரைப்பூஜை பண்ணி
வருவோம்நாமென்றழைக்கும் மாதுமையால்
சொற்படிக்கு

23 மகாலக்ஷ்மி தேவியரும் வாணி சரஸ்வதியும்
ஸுரலோகமங்கையரும் ஸுந்தரி இந்திராணியுடன்

24 சங்கரிதேவியுடன் சேர்ந்துவந்தார் கூட்டமதாய்
வானநதிக்கங்கைதன்னில் மங்கையர்கள் வந்திறங்கி

25 மஞ்சள் நீராடி வெண்பட்டால்ஈரமொற்றி
கோதிமயிராற்றி குழலுக்குப்பூமுடித்து

26 ஈரத்துயிலவிழ்த்து ஏற்றமுள்ளபட்டுடுத்தி
பத்தினிமார்களெல்லாம் பூஞ்சோலையில புகுந்து

27 மல்லிகைமுல்லை அரளி இருவாக்ஷியுடன்
செந்தாமரைப்பூவும் செங்கழுநீர் புஷ்பமுடன்

28 ஆனமலர்களெல்லாம் ஆராய்ந்துதானெடுத்து
தேனுடனே முப்பழமும் செவ்விளநீர்க்குலையும்

29 தாம்பூலம் கந்தவகை தட்டினிலேகொண்டுவந்து
எட்டாப்பரம்பொருளின் கிட்டவேவந்து நின்றார்

30 பருவதம்போல் விளங்கும் பசும்பொன்னால்
தேர்விளங்க
முத்தால் அலங்கரித்து மாலைகளும்தொங்கவிட்டு

31 பவழக்கொடுங்கையுடன் பக்கத்தின்சக்கரமும்
தங்கத்தினாலமைத்த தட்டுக்களாயிரமும்

32 குந்தளப் பொன்னாலமைத்த குடைகொடிகள்
தான்பிடிக்க
தங்கரத்தினத்தாலிழைத்த சாமரைகள் வீசிவர

33 அருணனென்னுஞ்சாரதியும் ரதமுகப்பிலே
அமர்ந்து
பச்சைக்குதிரைகட்டிப்பெரியதேர் தான் செலுத்த

34 சப்த மா தான்பூட்டித் தடந்தேரை ஓட்டிவர
அழகான் தேர்நடுவில் ஆதித்தன் ஜோதிவிட

35 ஆயிரம் கிரணங்கள் ஜோதிட ஆதித்தன்
வஜ்ஜிரமணிமகுடம் முடியின்மேலேவிளங்க
36 மகாமேருபருவதத்தை வளையவந்து பாஸ்கரனார்
உலகத்தோருய்ய உதயகிரிமேலெழுந்தார்
37 பவனிவரும் சூரியரைப் பத்தினிமார்கண்டுகந்து
அதிகபிரியத்துடனே அர்க்கியமுந்தான் கொடுத்
[தார்
38 பாதமலம்பிநல்ல பட்டினால் ஈரமொற்றி
ஈரமுலரவென்றே இணைகவரியால் விசிரி
39 புஷ்பத்தால் அர்ச்சித்து போற்றியந்தப்புண்ணி
[யரை
கனிந்தபழங்களையும் கதிரவனுக்கர்ப்பிதமாய்
40 நைவேத்தியம்பண்ணியவாள் நெய்விளக்குத்
[தானேற்றி
பன்னிருநாமத்தால் பகலவனைத்தான் துதித்தார்
41 கிருபையுடனே சூரியரும் பூஜைதன்னைத்தான்
[கிரகித்து
புவனேச்வரிகளையும் போற்றிமனமகிழ்ந்தார்
42 அவரவர்க்கு ஏற்றவரம் ஆதித்தனைக்கேட்டார்
ஈசரிடப்பாகத்தை என்றும பிரியாமல்
43 உடனாகவாழ்ந்திருக்க உமையவளும்கேட்டிருந்தாள்
இலக்ஷ்மிதேவி இச்சையுடனேயுரைப்பாள்
44 மாதவனார் தம்முடைய மார்பைவிட்டு நீங்காத
வரமெனக்குவேணுமென்று மகாலக்ஷ்மி கேட்டி
[ருந்தாள்
45 ஸரஸ்வதிதேவியுந்தான் சதுர்முகனார் தம்முடைய
நாவைவிட்டு நீங்காத நன்மைகளைத் தாருமென்றாள்
46 சாவித்திரிசந்தியை காயத்திரிபிரம்மனுட
சிரஸைவிட்டுநீங்காத சிலாக்கியத்தைக் கேட்டி
[ருந்தாள்
47 அயிராணியப்போ அமரர்கோன் தன்னுடனே
சபையைவிட்டு நீங்காத சுகந்தனையுங்கேட்டிருந்தாள்

48 அரிவையர்கள் கேட்டவரம் அப்படியே ஆகவென்று
இருபையுடனேவாழ்த்தி கதிரவனும் வாக்களித்தார்

49 அழகானதேர்நடத்தி ஆதித்தன்சென்றிடவே
ஸுந்தரிமார்களெல்லாம் தங்கள்கிரகத்தையடைந்
[தார்

50 சூரியமாலையைச் சொன்னவரும் கேட்டவரும்
சொல்லிக்கொடுத்தவரும்சொல்லுவதைக்கேட்பவரும்

51 மைந்தர்களைப்பெற்றிடுவார் மகிமையுடன் வாழ்ந்
திடுவர்
இவ்வுலகுக்காக்ஷிகளும் இகபோகந்தானடைந்து

52 பக்திமனதுடனே பரதேவி தன்கிருபையால்
முக்திபதமான மோக்ஷத்தைத்தானடைவார்

ஓம்—தத்—ஸத்—பிரம்மார்ப்பிதம்.

---

## பரமாத்மா திருப்பள்ளியெழுச்சி.

### பரமாத்மா வணக்கம்

1 மதுக்ஷீரம் பலகனிகள் நாளிகேரம் இக்ஷுகண்டம்
நல்லமோதகப் பணியாரவகைகள்
ஆதரவாய் நான் படைப்பேன் ஆவுடையாள்
திருமகனே
மரகதமான கணபதி காப்புதானே

2 சந்ததமும் என் நாவில் வந்துதவிசெய்யும் அம்மா
சாயாம்பூ ஸரஸ்வதியே சியாமளேயே—
தக்ஷிணாமூர்த்தியே ஸ்ரீ குருயோகியே
சுவாமிகள் சமாதி கொலுவோ!

## ஜீவன்முக்தர்களின் உதயகாலம்.

3 அஞ்ஞான இருள்பிரிந்து அறிவுதயமாகின்றது
விஞ்ஞான சூரியன் உதித்தார்—
ஜாக்ரஸ்வப்ன ஸுஷுப்தி என்ற இராத்திரியுங்
கழிந்து
ஸ்வாநுபோதோதயமானேன் ஐயாவே

4 ஜோதிர்மயமாகும் விருக்ஷம் ஜொலித்துமலர் சொரி
கிறது
(திட) ஞானபரிபக்குவ மாகின்றது
வைராக்கியக் குயிலினங்கள் (ஞான) மதுஸாரக்கனி
கோதி
தத்வமஸி என்று கூவிநிற்கின்றது

5 ஓங்காரமானதென்றல் வாடை நன்றாய் வீசுகிறது
சுயஞ்சோதி ஆதித்யனுதித்தார்—
பரிபூர்ண மேடைமேல் பராபரஹம்ஸங்கள்
நற்பிரணவப் பலனைத்தான்புஜித்து—

6 ஹம்ஸோஹ சிவோஹ பாவனைகள் பண்ணியே
அஹம்பிரம்மாஸ்மி என்று கூவுகின்றது
தக்ஷிணாமூர்த்தியே ஸ்ரீ குருயோகியே
ஸ்வாமின் சமாதி கொலுவோ,

7 மஹாத்துக்கள் பிரும்மநிஷ்டாள் பாலவிருத்தாள்
மஹாயோகி
குருசுவாமியின் தரிசனந்தேடி நிற்கின்றார்
அகண்டாகார ஆனந்த லக்ஷிமியுடனே
ஐக்கியபோகம் ஆனேன் சுவாமி குருவே!

8 காமக்குரோத லோபமோக மதமாச்சர்யம் மமதை
டம்பம்
அவித்தையுடன் ஆங்காரம் ஈஷணைகள் மூன்றும்
(இந்த) விபரீத சத்ருக்களை வேர்களைந்து நான்
ஜயித்து
ததா காரராஜ்ய ஜயமானேன் ஐயாவே;

9 உபதேசதாரக அருக்கன் வந்து உதித்தவுடன்
ததாகாரமான வெளியானேன் ஐயாவே
தக்ஷிணாமூர்த்தியே ஸ்ரீ குருயோகியே
சுவாமின் சமாதி கொலுவோ!

---

## ஜீவன் முக்தர்களின் உதயஸ்நானம்—ஜபம்

10 சாதன சதுஷ்டயாள் சத்புருஷாள் மகாயோகி
தங்கள் சத்தான பத்தினிகளுடனே
சச்சிதானந்த நதியில் நித்யமாக நீராடி
சத்தியமென்ற காயத்திரி ஜபித்து—

11 நிஷ்காம்யமாகவே நித்திய கருமம் செய்து
பிரம்மார்ப்பணங்கள் செய்து நிற்கின்றார்
தக்ஷிணாமூர்த்தியே ஸ்ரீ குருயோகியே
சுவாமின் சமாதி கொலுவோ!

---

## ஜீவன் முக்தர்களின் அக்னி ஹோத்திரம்.

12 லக்ஷணாத்திரயங்களென்னும் மதன தண்டந்தனைப் பிடித்து
தத்பத துவம்பதமென்ற அரணிக்கட்டையில்
சிரவணமனன நிதித்யாசனத்தால் மதனம் பண்ணி [ஜ்வாலையாக்கி
சாக்ஷாத்காரமென்னும் ஜ்வாலை வளர்த்து

13 அகண்டாகாரமென்ற அக்கினி குண்டத்தில்
ஆஹுதிகள் பண்ணி நிற்கிறாள்
தக்ஷிணாமூர்த்தியே ஸ்ரீ குருயோகியே
சுவாமின் சமாதி கொலுவோ!

---

## ஜீவன் முக்தர்களின் யாகம்

14 ஜீவேச்வரானென்ற தீக்ஷ தரும் அத்வர்யுவும்
சின்மாத்திர யாகம்பண்ண தீக்ஷைவகித்து
ஆகாம்ய ஸஞ்சிதவர்ணாசிரமங்களென்ற
நாமரூபகர்மப் பிராரப்த பசுவை

15 ஞானமென்ற பரசினல் கண்டங்கண்டமாய்த் துணித்து
ஜோதியாகும் வபையை எடுத்து
ஞானயோக சமாதியினல் பிரபலாக்கினி வளர்த்து
பரிபக்குவமாகச் சமைத்து

16 புண்ய பாவங்களென்ற ஆச்சியந்தனைச் சொரிந்து
புரோடாச பிண்டஹவிஸை
அகண்டாகாரமென்ற அக்கினிகுண்டத்தில்
ராஜயோக அத்வர்யர்கள் சூழ—

17 ஹம்ஸஸ்ஸோஹம் ஸோஹமென்று அவயமிட்டுக் கோஷமாய்
ஆஹுதிகள் பண்ணுகிறுர்கள்
தக்ஷிணாமூர்த்தியே ஸ்ரீ குருயோகியே
சுவாமின் சமாதி கொலுவோ!

---

## ஜீவன் முக்தர்களின் பூஜை

18 ஜோதிர்மயமாய் ஜ்வலித்து தாவள்யமாய் விளங்கும்
சாக்ஷாத்கார ஸ்படிக லிங்கத்தை
சித்தர்கள் திடஞானி சனகாதியோகியர்கள்
தியான யோக சமாதியினலே

19 தானே விசாரித்து ஸ்வானுபோக அனுபவத்தால்
ஆவாஹனமும் பண்ணினுள்
ஜன்மமிருத்யு ஜரைவியாதி கர்மபந்தம் அஞ்ஞான
நிர்மால்யந்தன்னைக்களைந்து

20 நிர்க்குண நிர்விகல்ப நிரஞ்சன சிம்ஹாசனத்தில்
அலங்கரித்து எழுந்தருளப்பண்ணி
சுத்தோதகமாகும் சத்தியகங்கை கொண்டு வந்து
தாராபிஷேகங்கள் பண்ணி,—

21 ஜோதிர்மயமாய் ஜ்வலித்து தாவள்யமாய் விளங்கும்
பீதாம்பரமுஞ் சாற்றி,
விபுவாய் நிறைந்தவற்கு விபூதி ருத்திராக்ஷம்
யக்ஞோபவீதமுஞ்சாற்றி,—

22 அதிசீதளமர்யிருக்கும் பரிமளகந்தங்களை
அலங்காரமாகப்பூசி
சத்துச்சித்தானந்தக் கிரீடகுண்டலங் கண்டஸரம்
சர்வாபரணங்களும் பூட்டி,—

23 ஆதியந்தமற்றவர்க்குஅர்க்கியங்கள் தான்கொடுத்து
அன்பென்னும மலர் தன்னைச்சாற்றி,
அகண்டாகாரமான தூபதீபங்காட்டி
அக்ஷதைதிலகமுஞ் சாத்தி,

24 அண்டாண்டபிரம்மாண்ட யுகயுகபிரளயங்களை
மஹாநைவேத்தியமாகப்பண்ணி
ஹம்ஸோஹ ஹம்ஸோஹ மென்னும் கற்பூரதீபங்காட்டி
ஐக்கியநமஸ்காரமும்பண்ணி,

25 தக்ஷிணாமூர்த்தியே குருவாய் வந்து என்செவியில்
தாரகோபதேசஞ் செய்த பின்
நித்தியானந்தமடைந்து(இந்த)தேகந்தனையும் மறந்து
நிராகார வெளியானேன் ஐயாவே!
தக்ஷிணாமூர்த்தியே ஸ்ரீ குருயோகியே
சுவாமின் சமாதி கொளுவோ!

ஓம்—தத்—ஸத் பிரம்மார்ப்பிதம்.

# வேதாந்த உதயராகப் பாட்டுகள்

---

## (ஜீவன் முக்தர்கள் உதயகாலம்)

### 2

#### உதயராகம்

1 உதயமாச்சுது ஹிருதயந் தெளிந்தது
உந்தன் தரிசனமாச்சுது
பிரமைகளாகின்ற மாயை ஒழிந்தது
பரிபூர்ணமாய் மனம் நிறைந்தது

2 மாயையாகின்ற இருள்பிரிந்தது
மதியான சூரியன் உதித்தது
காயக்கொடிவேர் அற்றுபோச்சுது
கர்மம்விட்டு வெளியாச்சுது

3 பாசமாகின்ற பனியுந்தெளிந்தது
பிரகாசமவந்து அண்டம் நிறைந்தது
கிலேசமற்றதோர் திவாகரனும் உதித்து
ஹிருதயாகாசம் எங்கும் வெளியாச்சுது

4 காமமென்கிற கள்ளர்பயத்தினல்
கலங்கிநிற்கின்ற ஜீவர்க்கு
நேமமாம்பரயோக நிஷ்டையால்
காமாதிகள் ஓடிப்போச்சுது

5 விஷயமாகும் நக்ஷத்திரங்கள் மறைந்தது
விவேகமாம் நிலந்தெளிந்தது
அகம்பிரம்ம நிலைதனையடைந்தது
அருள் அருண உதயமாச்சுது

6 தொண்ணூற்றாறு தத்துவமாகும் கொடிகளும்
சன்னபின்னலாய்ச் சூழ்ந்தது
சித்தம் தெளிந்தோர் ஞானக்கத்தியால்
வெட்டியே அறுபட்டுப் போச்சுது

7 வேதநால்கடலும் அலைவந்தடிக்குது
விளங்கும் சின்மயானந்தம் பெருகுது
நாதமென்னும் ஓங்காரசப்தத்தால்
நரகக்குழி தூர்ந்துபோச்சுது

8 ஞானநதிதன்னில் ஸ்நானம் பண்ணியே
மௌன வெண்பட்டு உடுத்தியே
தியானமாகும் விபூதி உடம்பெங்கும்
தரித்தேன் பரிபூர்ணமாகவே

9 ஞானக்கோபுர உச்சிமீதினில் சகஸ்ரகமலதளத்திலே
ஜீவன் நான் பரமாத்மமூர்த்தியை சேவித்தே
[ஐக்கியமாகினேன்.

## உதயராகம்.

1 அக்கியானமாகின்ற நித்திரை தெளிந்துபோச்சு
பிரக்கியான ஜாக்கிரதை கண்டுதே
விக்கியானமாகின்ற சூரிய உதயமாகி
வெய்யலுங் கூடத்தில் வந்ததே

2 சிரவணமென்கிற வீட்டில் சாணந்தெளியாமல்
தத்துவக் குப்பை கிடக்குதே
(அந்தச்) சேர்த்துத்திரட்டி எடுக்கத் தெரியவில்லை
(ஜக)தீச்வரா என்னசெய்குவேன்

3 காயமாகின்ற வீட்டில் எண்ணித்தொலையாத
காரியங்கிடக்குது ஈச்வரா
ஞாயமோநானிந்தப் பாட்டுக்கில்க்கானேன்
நானிந்தக் கிலேசப்படலாமோ

4 ப்ராரப்தமாகின்ற கடன்காரன் மறியலாய்
பாடிருக்கான் தலைவாசலில்
யாரைப்போய் நல்லது சொல்லுவேன் நானிப்போ
யாரும் அதைவிலக்க இல்லையே

5 விரக்தி என்ற பர்த்தாவெளியிலே புறப்பட்டால்
விலங்கிடுகின்றார் இருகாலிலும்
துரத்தியடிக்கின்ற காலமோ வேளையோ
சோதனையோ இது ஈச்வரா

6 கைவல்யமாகின்ற கர்ப்பம் வயிற்றினில்
கல்லுப்போல் மெத்தக்கனக்குதே
செய்யுங்கருமங்கள் ஒன்றுந்தெரியவில்லை
தெய்வமே நானென்னசெய்குவேன்

7 போதமாகின்ற பிள்ளை பின்னுடன் தொடருது
சிரவணமாகும் ஸ்தன்யம் தரச்சொல்லி
பாதத்தைக்கட்டியே பாலனழுதிட்டால்
பார்ப்பது எப்படிக்காரியம்

8 கொண்டிமனப்பசுவை அண்டமுடியவில்லை.
தொண்டு கழுத்தினில் கட்டியே
அண்டமளந்த கோபாலருடன் சொல்லிக்
கொண்டுவிடவேணும் அதனையும்

9 அண்டாத ஸம்ஸார ப்ராரப்த வலைதன்னில்
அகப்பட்டுக்கொண்டு விழிக்கின்றேன்
தாண்டவழிபாரும் ஆண்டவரே எங்கள்
சுவாமிகுரு வெங்கடேச்வரா.

---

# ஜீவன் முக்தர்கள் விரக்தி

**உதயராகம்**

1 அஸ்திகடிக்கும் சுவானம் போல அறிவழிந்து
நாஸ்தியாமிந்த ஜகத்திலே
தத்திவிழுந்தோடும் ஜீவா உனக்குநற்
புத்திசொல்லுவேன் இப்போகேட்பாயோ

2 மூலாதாரமான சையபர்வதந்தொட்டு
சகஸ்ரார பிரமாந்திர பரியந்தம்
பக்தாளும் முக்தாளும் சாக்தாளும் தேவாளும்
அத்தனைபேரும் வசிக்கின்றார்

3 காணும் பிரபஞ்சங்கள் எல்லாங் கடம்போலே
நாசமாகுமென்று பார்த்திடாய்
தோணும் சிதாகார சைதன்ய வஸ்துவை
சுகசொரூபமென்று அறிந்திடாய்

4 விதவாபூஷணம்போல அன்யசாஸ்திரங்கள்
வியர்த்தமாகுமென்று அறிந்திடாய்
பரமாயிருக்கின்ற அத்வைத சாஸ்திரத்தை
பார்த்தே கிருதார்த்தனாய் பஜித்திடாய்
நாதமென்னும் ஓங்காரசப்தத்தால்
நரகக்குழி தூர்ந்துபோச்சுது

5 சோதிர்மயமான ஸுஷும்னநாடியில்
சுத்தமாங்காவேரி தன்னிலே
சூக்ஷ்மதேகத்தினால் ஸ்நானஞ்செய்தால்பத்மம்
பிரகாசிக்கும் ஹிருதயந்தன்னிலே

6 உலகம் பதினாலும் உன்னுடஹிருதயத்தின்
உள்ளேயிருக்குதென்றே சொல்லி
உத்தரகீதையில்சுவாமி பார்த்தனுக்கு
உபதேசம்பண்ணி இருப்பதால்

7 ஸேதுவுங்காசியும் ஸ்ரீ கும்பகோணமும்
ஸ்ரீ ரங்கம் ஜம்புகேஸ்வரமும்
திருவையாறும் மத்தியார்ச்சுனமாயூரமும்
(உன்) தேகத்தில் உண்டென்று பார்த்திடாய்

8 கிடைத்தசிந்தாமணி விட்டுவிட்டுக்காலில்
கச்சாமணி தேடும் பிராந்தம்போல்
சொல்லச்சோர்வில்லாத சுவானுபோகத்தைவிட்டு
அல்லலாம்கர்மத்தில் அலையாதே

9 ஸ்ரீ வெங்கடேச குருவையும் சிந்தித்து
தக்ஷிணாமூர்த்தியை சேவிப்பாய்
பிரீதியுடனே அனுக்கிரகம் பண்ணுவர்
பிரம்மமாகவே உன்னைப்பாவிப்பாய்.

---

# ஜீவன்முக்தரின் ஆருதார தேவதைகள் வணக்கம்.

உதயராகம்.

1 கண்டுதொழுதேன் அகண்டந்தன்னிலே
காலபயந்தீர்த்த கண்டரை
அண்டர்போற்றிடும் புண்டரீகரை
ஆதிபரப்பிரம்மமூர்த்தியை—கண்டுதொழுதேன்

2 மூலாதாரத்தில் முக்திகணபதி
மூஷிகந்தன்னில் ஏறியே
நாதம்முழங்கவே நாலுதளத்திலே
வல்லபைசக்திநாதனைக்—கண்டுதொழுதேன்

3 சுவாதிஷ்டானத்தில் சரஸ்வதி பிரம்மா
ஸரோருஹம் ஆறு தளத்தினில்
ஹம்ஸவாகனந் தன்னிலேறியே
அகிலம்சிருஷ்டிக்கும் நாதனைக்—கண்டுதொழுதேன்

4 மணிபூரந்தனிலே மகாவிஷ்ணுலக்ஷ்மி
மட்டில்லாத தசதளத்திலே
மணியணிபூட்டிய கருடன்மீதினில்
அறிவின் சொரூபனும் ஆதியைக்—கண்டுதொழு
[தேன்

5 அனுஹத மென்றமண்டபந்தன்னில்
ஆனபனிரண்டு தளத்திலே
ரிஷபவாகனந்தன்னிலேறியே
பார்வதிபரமேசரைக்—கண்டுதொழுதேன்

6 பக்தியுடன் வந்து பதஞ்சலிவியாக்கிரர்
ஏற்றியே பூஜைபண்ணவே
இஷ்டமுடனென்னைக் காத்துரக்ஷிக்கும்
எங்கள் பார்வதிநாதரைக்—கண்டுதொழுதேன்

7 விசுத்தியாகின்ற மண்டபந்தன்னில்
விசித்திரம் பதினாறு தளத்திலே
ஜீவவாகனம் தன்னிலேறியே
ஜீவாத்மாவுடன் ஐக்கியமாம்—கண்டுதொழுதேன்

8 ஆதாரமாய் மூலப்பிரகிருதிபிரபஞ்சத்தை
அடக்கியே உள்ளே ஆனந்தம்
ஆக்ஞையிலிருந்து அண்டமீரேழும்
காத்து அளிக்கும் எங்கள்நாதனைக்—கண்டு
தொழுதேன்

9 சுப்பிரகாசரை ஜோதிசொரூபரை
சொல்லுக்கெட்டாத பரப்பிரமத்தை
அப்பிரகாசரை அகண்டரூபரை
ஆதியந்தமற்ற ஜோதியைக்—கண்டுதொழுதேன்.

---

## அரிஹரீ ஸ்தோத்திரம்.

1 ஓதக்கடலில் உதித்தீர் அரிஹரீ
உலகத்துக் கொருவனாய் நின்றீர் அரிஹரீ
பச்சைநிற ஆலிலைமேல் படுத்தீர் அரிஹரீ
பசுங்குழந்தை ரூபமாய் இருந்தீர் அரிஹரீ

2 இச்சித்த ரூபம் எடுத்தீர் அரிஹரீ
இறப்பும் பிறப்பும் தவிர்ப்பீர் அரிஹரீ
பச்சைநிறமுள்ள எந்தன்மாலே அரிஹரீ
பக்ஷமுடன் இரட்சிக்கும் கிருஷ்ணா அரிஹரீ

3 பாற்கடலில் பள்ளிகொண்டிருந்தீர் அரிஹரீ
பங்கஜலக்ஷ்மியின் நாதா அரிஹரீ
பூதேவிபாரம் பொருக்காதே அரிஹரீ
பிரம்மாவிடம் வந்து சொன்னாள் அரிஹரீ

4 தேவர்களும் ரிஷிகளும் கூடி அரிஹரீ
க்ஷீராப்திக் கரைதன்னிலேவந்தான் அரிஹரீ
ஜகன்னுதா உம்மை ஸ்துதித்தாள் அரிஹரீ
சரணும்புஜங்களில் பணிந்தாள் அரிஹரீ

5 தேவர்களுக்கபயம் அளித்தீர் அரிஹரீ
சேஷரையும் அண்ணராய்க் கொண்டீர் அரிஹரீ
(ஸ்ரீ) கிருஷ்ணபலராமனுய் ஜனித்தீர் அரிஹரீ
கிருபையுடனே ரக்ஷிக்கவேண்டி அரிஹரீ

6 தேவகியின் கர்ப்பத்தில் வந்தீர் அரிஹரீ
திருமுகத்தைக்கண்டு மகிழ்ந்தாள் அரிஹரீ
சந்திர உதயம்போல் பிறந்தீர் அரிஹரீ
சதுர்ப்புஜமூர்த்தியாய் நின்றீர் அரிஹரீ

7 தேவாதிதேவரென்று கிருஷ்ண அரிஹரீ
தேவகியும் மகிழ்ந்து ஸ்துதித்தாள் அரிஹரீ
வஸுதேவர் விரும்பி ஸ்துதித்தார் அரிஹரீ
மர்மமாய் கொண்டொளிக்கச் சொன்னீர் அரிஹரீ

8 வஸுதேவர் விலங்கெல்லாம் முறிய அரிஹரீ
வாசலெல்லாம் தாள்கள் திறக்க அரிஹரீ
மைந்தரைத்தோளில் எடுத்தே அரிஹரீ
வழிவிட யமுனையும் வந்தார் அரிஹரீ

9 கோகுலந்தன்னில்வந்து கிருஷ்ண அரிஹரீ
கோபியசோதை கிரகத்தில் புகுந்தீர் அரிஹரீ
மங்கை யசோதையிடம் விட்டார் அரிஹரீ
மாய்கைபெண்ணைக் கொண்டுவந்தார் அரிஹ

10 தேவகியிடம்விட்டு சிசுவை அரிஹரி
சோகத்துடன் வருந்தியிருந்தார் அரிஹரி
மாபாவி கம்சனிதைக் கேட்டான் அரிஹரி
வாளுருவிக்கொண்டோடி வந்தான் அரிஹரி

11 தேவகியும் அணைத்திருந்த சிசுவை அரிஹரி
திடுக்கிட்டு நடுங்கிடவே பிடுங்கி அரிஹரி
கடுங்கோபத்துடன் கூட கம்ஸன் அரிஹரி
கற்பாறை தன்னிலே அறைந்தான் அரிஹரி

12 பாறைதன்னில் விழாமல் மாயை அரிஹரி
பாய்ந்தெழுந்து அந்தரத்தில் போனாள் அரிஹரி
உன்னைக் கொல்லவந்த மாயன் அரிஹரி
ஒளிந்துவிளையாடுகிறான் என்றாள் அரிஹரி

13 என்னைக்கொல்லவுனக் கெளிதோவென்றே அரிஹரி
ஈச்வரியாள் மாய்கைசொல்லி இகழ்ந்தே அரிஹரி
மாய்கைசொல்லி அந்தரத்தில் மறைந்தாள் அரிஹரி
மதிகலங்கிக் கம்ஸன் மனை சென்றான் அரிஹரி

14 கோகுலந்தன்னிலே யசோதை அரிஹரி
குழந்தையைக் கண்விழித்துப்பார்த்தாள் அரிஹரி
பச்சைமுகில் மேனியனைக்கண்டே அரிஹரி
பரவசமாய் எடுத்தணைத்துக் கொண்டாள் அரிஹரி

15 நந்தகோபர் மகிழ்ந்து கிருஷ்ணா அரிஹரி
நன்மையுடன் நீராடி வந்தார் அரிஹரி
புத்திரனை எடுத்துக்கொண்டே அரிஹரி
பொன்னுறைத்து நாவிலிட்டுப் போற்றி அரிஹரி

16 திருமஞ்சனமாட்டி சிறப்பாய் அரிஹரீ
திருமுலைப்பாலமுது தந்தாள் அரிஹரீ
கோபாலர் கோபிகைகள் கூடி அரிஹரீ
குழந்தையைக்கண்டு மனம்மகிழ்ந்தாள் அரிஹரீ

17 ஜாதகர்மம் நாமகர்ணஞ் செய்தார் அரிஹரீ
சங்கையற்ற தானங்களைத்தந்தே அரிஹரீ
விரைதானம் கோதானம் கிருஷ்ண அரிஹரீ
வேதியருக்களித்து நந்தர் மகிழ்ந்தார் அரிஹரீ

18 நந்தருடமாளிகையில் மகிழ்ந்தே அரிஹரீ
ராமருடன் ரோகிணியுமிருந்தாள் அரிஹரீ
சோதையுடன் ரோகிணியுஞ்சேர்ந்தே அரிஹரீ
ஸ்ரீ கிருஷ்ண ராமனென்றுசொல்லி அரிஹரீ

19 கீர்த்தியுள்ள நாமத்தையிட்டாள் அரிஹரீ
கற்காசாரிவந்துபோனார் அரிஹரீ
அன்னையென்னும் யசோதைமகிழ அரிஹரீ
அன்புடனே கோகுலத்தில் வளர்ந்தீர் அரிஹரீ

20 பொல்லாத கம்ஸன் அனுப்ப அரிஹரீ
பூதனையுங் கோகுலத்தில் வந்தாள் அரிஹரீ
பூதனைப்பேய் முலையை உண்டீர் அரிஹரீ
பாலுடனே அவளுயிரைத்தின்றீர் அரிஹரீ

21 சென்றவளுக்கு மோக்ஷங்கொடுத்தீர் அரிஹரீ
திரும்பாத பதவியளித்தீர் அரிஹரீ
சகடாஸுரனை வதைத்தீர் அரிஹரீ
சிதறிவிழவே மடித்தீர் அரிஹரீ

22 சுழல்காற்று அஸுரனும் தோன்றி அரிஹரீ
சிசுவை எடுத்தோடிச்சென்ருன் அரிஹரீ
சிசுவுங்கனமாகவே கிருஷ்ண அரிஹரீ
திருணுவர்த்தன் விழுந்தங்கே மடிந்தான் அரிஹரீ

23 அன்னையுட ஒக்கலையிலிருந்தே அரிஹரீ
அம்புலியைத்தாவென்றழுதீர் அரிஹரீ
அன்னமயங்கியிருக்க கிருஷ்ண அரிஹரீ
அம்புலியைக் கிட்ட அழைத்தீர் அரிஹரீ

24 மானிடக்குழந்தைபோல் கிருஷ்ண அரிஹரீ
மண்தின்னும் பாவனையாய்நின்றீர் அரிஹரீ
மைந்தரென்ற பாவனையால் யசோதை அரிஹரீ
மலர்க்கையை ஓங்கிவந்தாள் அரிஹரீ

25 பயந்தவர்போல் வாயைத்திறந்தீர் அரிஹரீ
பாருலகுஜகமெல்லாம் பார்த்தாள் அரிஹரீ
பரவசமாய்த்திகைத்து அன்னைபார்க்க அரிஹரீ
பாலனென்ற பாசத்தையடைந்தாள் அரிஹரீ

26 மத்திட்டு தயிர்கடைய மாதா அரிஹரீ
மடியிலிருந்து பால்தாவென்றழுதீர் அரிஹரீ
தாங்கியன்னை மடியில்வைத்து கிருஷ்ண அரிஹரீ
தன்முலைப்பா லமுதம்தந்தாள் அரிஹரீ

27 தாழிப்பால் பொங்கிவரக் கிருஷ்ண அரிஹரீ
சடுதியிலே உம்மைவிட்டுப்போனள் அரிஹரீ
தண்டையுடன் வெண்டயமுங்குலுங்க அரிஹரீ
தயிர்த்தாழி தனைககாலால் உதைத்தீர். அரிஹரீ

28 தவிழ்ந்துநீர் மறைந்துவிடக் கிருஷ்ணு அரிஹரீ
தெருவெல்லாம் தேடித்தொடர்ந்தாள் அரிஹரீ
வீதியெல்லாங்கூடவந்து கிருஷ்ணு அரிஹரீ
விளையாடிவழிமறைத்துப் பிடித்தாள் அரிஹரீ

29 திருடனிந்தக்கிருஷ்ண னென்றுச்சொல்லி அரிஹரீ
சிட்சிக்கவேணுமென்று நினைத்தாள் அரிஹரீ
உரலுடனேயணைத்து உன்னைக் கட்ட அரிஹரீ
இருவிரல்கயிறு குறையக்கண்டாள் அரிஹரீ

30 தள்ளாடி அன்னையப்போ நடந்தே அரிஹரீ
அணைக்கயிற்றைக் கொணர்ந்து பிணைத்தாள்
அரிஹரீ
தாமோதராவுன்னைக் கட்டி அரிஹரீ
தன்னுடைய வேலைக்குப்போனாள் அரிஹரீ

31 உரலுடனே தவழ்ந்துருண்டு கிருஷ்ணு அரிஹரீ
உயர்ந்த மருதமரத்தை உதைத்தீர் அரிஹரீ
நளகூபர் எழுந்தும்மை ஸ்துதிக்க அரிஹரீ
நன்மையுடன் நற்கதியுமளித்தீர் அரிஹரீ

32 மருதமரம் முறிந்துவிழக் கிருஷ்ணு அரிஹரீ
மாதாவும் தான்பயந்து வந்தாள் அரிஹரீ
அர்ச்சுனவிருக்ஷங்களையும் பார்த்தாள் அரிஹரீ
அதனிடையில் நீ விளையாடக்கண்டாள் அரிஹரீ

33. தந்தையந்த நந்தர் வந்து பார்த்தே அரிஹரீ
தழுவும்மை யெடுத்தணைத்துச்சென்றார் அரிஹரீ
பாலனுக்குத்திருஷ்டி சுற்றிப்போட்டார் அரிஹரீ
பாலலீலை தன்னைக்கண்டு பயந்தெளிந்தார் அரிஹரீ

34 அன்புடைய தந்தை தாய் மகிழ அரிஹரீ
அங்காடிப்பழம்வாங்க வந்தீர் அரிஹரீ
அங்கையில் ஜம்பூபழம் கொண்டீர் அரிஹரீ
அவள்மகிழப் பாக்கியமளித்தீர் அரிஹரீ

35 பிருந்தாவனமடைந்து கிருஷ்ண அரிஹரீ
பாலருடன் பசுமேய்க்கப்போனீர் அரிஹரீ
கன்றுருவங்கொண்டுவந்து அஸுரன் அரிஹரீ
கலங்கிவிழிக்கையில் வதைத்தீர் அரிஹரீ

36 கொக்காஸுரன் வந்துகொத்த அரிஹரீ
கோரையைப்போல கிழித்துக் கொன்றீர் அரிஹரீ
மலைப்பாம்புபோலிருந்த அவனை அரிஹரீ
வாய்க்குள் புகுந்தவனை வதைத்தீர் அரிஹரீ

37 ஆரும்வயதுமுதல் கிருஷ்ண அரிஹரீ
அழகாகப்பசு மேய்க்கப்போனீர் அரிஹரீ
கோபியர்கள்கிரகமெல்லாஞ் சென்றீர் அரிஹரீ
கடைந்த வெண்ணெய் பால் தயிரும் உண்டீர் அரிஹரீ

38 உரியில்வைத்த சட்டியை உடைத்தீர் அரிஹரீ
தயிர்பாலைத்தோழருடன் குடித்தீர் அரிஹரீ
தூங்கிநின்ற பூனைக்கும் போட்டீர் அரிஹரீ
புறமிருந்த குரங்குகளும் புஜிக்க அரிஹரீ

39 முத்தணிந்த கோபியர்கள் கூட அரிஹரீ
முறையிட்டுக் குறைசொல்லிக்கொண்டாள் அரிஹரீ
துஷ்டனிவனென்றுசொல்லச் சோதையால் அரிஹரீ
பக்ஷமுடன் சிக்ஷிக்கப்பட்டீர் அரிஹரீ

40 கோபால பாலருடன் கூடி அரிஹரீ
குழலூதி விளையாடிக்களித்தீர் அரிஹரீ
யமுனாநதிக்கரையிலாடி அரிஹரீ
இன்பமுடன் ததியன்னம் உண்டீர் அரிஹரீ

41 பாலருடன் கன்றுகளைப் பிரம்மா அரிஹரீ
பாராமல் கொண்டொளித்துப் போட்டார் அரிஹரீ
நான்முகரும் அதிசயிக்க கிருஷ்ணா அரிஹரீ
நன்றாகச் சிருஷ்டி பண்ணிக்கொண்டீர் அரிஹரீ

42 வருஷமொன்று சென்றவுடன் பிரம்மா அரிஹரீ
மறைந்திருந்த கன்றுகளை விடுத்தார் அரிஹரீ
கொண்டொளித்த கோபாலர்கூடி அரிஹரீ
கிருஷ்ணாவென்று கூடிவந்தார் அரிஹரீ

43 மாய்கையினால் சிருஷ்டித்தபாலர் அரிஹரீ
மகிமையுள்ள உம்மிடத்தில் மறைந்தார் அரிஹரீ
பழக்கமுள்ள பாலருடன் சேர்ந்தே அரிஹரீ
பக்குவமாய் அன்னம் புஜித்தீர் அரிஹரீ

44 காட்சிகளைக் கண்டிருந்த பிரம்மா அரிஹரீ
கிருஷ்ணா உம்மைக்கண்டு புகழ்ந்தார் அரிஹரீ
பகவான் உம்மைக்கண்டு பணிந்தார் அரிஹரீ
பிரம்மாவும் தன்னுலகம் போனார் அரிஹரீ

45 பிரிந்திருந்த கன்றுகளைப்பார்த்தீர் அரிஹரீ
பாலருடன் கோகுலத்தில் போனீர் அரிஹரீ
கிரகங்களைச் சேர்ந்தவுடன் கிருஷ்ணா அரிஹரீ
கோபாலரெல்லாம் உம்மைப் புகழ்ந்தார் அரிஹரீ

46 தேனுகாசுரனை ஜயித்தீர் அரிஹரீ
தோழருடன் பனம்பழம் புஜித்தீர் அரிஹரீ
துஷ்டர்களை சம்ஹரித்துப்போட்டீர் ஹரிஹரீ
இஷ்டர்களை காப்பாற்றியிருந்தீர் அரிஹரீ

47 காளியன்முடியில் விளையாடி அரிஹரீ
கருணையுடன் அவனுயிரைக் காத்தீர் அரிஹரீ
கோவர்தனகிரியைத் தாங்கி அரிஹரீ
கருணையுடன் மழைதடுத்துக் காத்தீர் அரிஹரீ

48 கொண்டாடிப் புரந்தரனும் வந்தே அரிஹரீ
கோவிந்தாவென்றே ஸ்துதித்தான் அரிஹரீ
பிரலம்பனென்ற அஸுரனைக் கிருஷ்ண அரிஹரீ
பலராமனால் கொன்று போட்டீர் அரிஹரீ

49 கோபிகைகள் சேலைகளைக்கொண்டே அரிஹரீ
குளிந்த புன்னைமரத்தில் ஒளித்தீர் அரிஹரீ
வேணுகானஞ்செய்து கிருஷ்ண அரிஹரீ
விளையாடி ஜலக்கிரீடை செய்தீர் அரிஹரீ

50 கோபியர்கள் மனங்குளிரக் கிருஷ்ண அரிஹரீ
கிரீடைபண்ணிக் கிருபையுடனிருந்தீர் அரிஹரீ
பக்தியுள்ள கோபியர்கள் ஸ்துதிக்க அரிஹரீ
பிருந்தாவனத்தில் சஞ்சரித்தீர் அரிஹரீ

51 குழலூதி கோபியரை மயக்கி அரிஹரீ
கோபாலராஸக்கிரீடை செய்தீர் அரிஹரீ
கோவிந்தா உன்குணங்களைப்பாடி அரிஹரீ
கோபிகாகீதங்களைச் சொன்னாள் அரிஹரீ

52 குதிரைமுக அஸுரனையுங்கொன்றீர் அரிஹரீ
வியோமாஸுரனை வதைத்திர் அரிஹரீ
லேக்குகையின் பாலர்களை மீட்டீர் அரிஹரீ
மகிழ்ச்சியுடன் விளையாடிவந்தீர் அரிஹரீ

53 அரிஷ்டனென்ற அஸுரனையழித்தீர் அரிஹரீ
அவனுடைய கருவத்தை யொழித்தீர் அரிஹரீ
அக்ரூரர் வந்தழைக்க கிருஷ்ணு அரிஹரீ
அண்ணருடன் தேரேறிச்சென்றீர் அரிஹரீ

54 அக்ரூரர் துதித்திடவே கிருஷ்ணு அரிஹரீ
அணிரதத்தில் அண்ணருடனிருந்தீர் அரிஹரீ
காளிந்திநதிக்கரையில் கிருஷ்ணு அரிஹரீ
காட்சியுள்ள விச்வரூபங்கொண்டீர் அரிஹரீ

---

## அக்ரூரர் பகவான் அவதாரங்களைச் சொல்லித்துதித்தல்.

55 அக்ரூரர் விச்வரூபங்கண்டார் அரிஹரீ
அதிசயித்துப் பரவசமடைந்தார் அரிஹரீ
வைகுண்டர் வைபவத்தைக்கண்டே அரிஹரீ
வணக்கமுடன் பணிந்தே ஸ்துதித்தார் அரிஹரீ

56 ஆதியுமனாதியுமாய் ஆனீர் அரிஹரீ
அகில சிருஷ்டிஸ்திதி லயமுஞ்செய்தீர் அரிஹரீ
பிரகிருதியென்னும் பெட்டகத்திலிருந்து அரிஹரீ
பிரம்ஹாவும் உம்மிடம் உதித்தார் அரிஹரீ

57 மாயைக்கும் எட்டாத விஷ்ணு அரிஹரீ
முக்குணங்களற்றிருக்கும் மூர்த்தி அரிஹரீ
மத்ஸ்யாவதாரம் எடுத்தீர் அரிஹரீ
மனுவை பிரளயத்தில் கார்த்தீர் அரிஹரீ

58 மதுகைடப அஸுரர்களை வதைத்தீர் அரிஹரீ
மலரயன் மயக்கம் ஒழித்தீர் அரிஹரீ
ஹயக்கிரீவ மூர்த்தியாய் நின்றீர் அரிஹரீ
அன்பர்களுக்குபதேசஞ்செய்தீர் அரிஹரீ

59 கூர்மாவதாரம் எடுத்தீர் அரிஹரீ
கிரிதாங்கி அம்ருதங் கடைந்தீர் அரிஹரீ
வராகாவதாரம் எடுத்தீர் அரிஹரீ
விளையாட்டாய் அஸுரனை வதைத்தீர் அரிஹரீ

60 நரஸிம்மராய் தூணில் உதித்தீர் அரிஹரீ
நடுங்க இரணியனைப் பிளந்தீர் அரிஹரீ
வாமனராய்வந்து உதித்தீர் அரிஹரீ
மாபலியை வஞ்சித்துப் போட்டீர் அரிஹரீ

61 பரசுராமனாய் அவதரித்தீர் அரிஹரீ
பகைத்த அரசர்களை வதைத்தீர் அரிஹரீ
தசரதருக்கு மைந்தராய் வந்தீர் அரிஹரீ
தம்பியர்களுடன் கூடப் பிறந்தீர் அரிஹரீ

62 தருமந்தழைத்தோங்க ஸ்ரீராமா அரிஹரீ
சத்தியத்தை நிறைவேற்றி நின்றீர் அரிஹரீ
கொடியவளாந் தாடகையை முடித்தீர் அரிஹரீ
கௌசிகரின் யாகத்தை காத்தீர் அரிஹரீ

63 மாரீசனை கடலில் தள்ளி அரிஹரீ
மகமுனியின் யக்ஞம் முடித்தீர் அரிஹரீ
அகலிகையின் சாபம் துடைத்தீர் அரிஹரீ
அவள் ஜன்மம் ஈடேரச்செய்தீர் அரிஹரீ

64 ஜனகரிடமிருந்த வில்லையொடித்தீர் அரிஹரீ
சீதையை மாலையிட்டு வந்தீர் அரிஹரீ
பரசுராமன் வில்லை முறித்தீர் அரிஹரீ
பலத்துடனே அவர் தபஸை யடைந்தீர் அரிஹரீ

65 பிதுர்வாக்கியம் நிறைவேற்ற ராமா அரிஹரீ
பதினாலுவருஷம் வனம்போனீர் அரிஹரீ
தண்டகா வனஞ்சென்று ராமா அரிஹரீ
சூர்ப்பனகியைப் பங்கம் செய்தீர் அரிஹரீ

66 ஸந்யாஸி ராவணன் வந்து அரிஹரீ
ஜானகியை சிரையெடுத்துப் போனார் அரிஹரீ
ஜடாயுவுக்கு மோக்ஷங்கொடுத்தீர் அரிஹரீ
சபரிக்கு முக்தியளித்தீர் அரிஹரீ

67 சுக்ரீவன் தோழமையைக்கொண்டீர் அரிஹரீ
துடுக்கான வாலியைய முடித்தீர் அரிஹரீ
அன்பான மாருதியுந்தேடி அரிஹரீ
(கணை) யாழிதனைக் கைகொடுத்து வந்தார் அரிஹரீ

68 சூடாமணிகண்டு ராமா அரிஹரீ
சேதுவினிலணைகட்டிச் சென்றீர் அரிஹரீ
தசமுகனைக் குலத்துடனே கொன்றீர் அரிஹரீ
சீதையுட சிறைமீட்டுக்கொண்டீர் அரிஹரீ

69 அன்புடைய கௌஸலையும் மகிழ அரிஹரீ
அயோத்திக்கு அரசனாய் இருந்தீர் அரிஹரீ
பலராமகிருஷ்ணனாய்ப் பிறந்தீர் அரிஹரீ
பார்த்தனுக்கு சாரதியாய் அமர்வீர் அரிஹரீ

70 பொல்லாத அஸுரர்களை வதைப்பீர் அரிஹரீ
பூதேவி பாரங்குறைப்பீர் அரிஹரீ
பார்த்தனுக்கு தத்வம் உரைப்பீர் அரிஹரீ
பாரதப்போரை முடிப்பீர் அரிஹரீ

71 பௌத்தாவதார்த்தை எடுப்பீர் அரிஹரீ
பிராணிகளுக் குபகாரஞ் செய்வீர் அரிஹரீ
கலி தன்னை தொலைத்திடவே கிருஷ்ணா அரிஹரீ
கருணையுடன் காட்சி தன்னை அளிப்பீர் அரிஹரீ

72 ஆதிநாராயணா நமஸ்தே அரிஹரீ
அக்ஞானம் நீக்குவாய் நமஸ்தே அரிஹரீ
பக்தியுடன் அக்ரூரர் ஸ்துதித்து அரிஹரீ
பல்ராமகிருஷ்ணரையும் புகழ்ந்தார் அரிஹரீ

73 மகிழ்ச்சியுடன் ஸ்துதிக்கவே கிருஷ்ணா அரிஹரீ
மதுராநகரம் அடைந்தீர் அரிஹரீ
வணங்காத வண்ணானை வதைத்தீர் அரிஹரீ
வஸ்திரங்களை வழங்கி நின்றீர் அரிஹரீ

74 மலர் மாலையளித்திட்ட நம்பிக்கு அரிஹரீ
வைகுண்ட பதவியைக் கொடுத்தீர் அரிஹரீ
பரிமளச்சந்தனங்கள் பூசி அரிஹரீ
பரிவுடன் கூனலையும் நிமிர்த்தி அரிஹரீ

75 திருவக்கிரயை மனமகிழச்செய்தீர் அரிஹரீ
சேணியன் ஆடையணி தந்தான் அரிஹரீ
அண்ணருடன் வாங்கி யணிந்தீர் அரிஹரீ
அன்புடனே பதவியளித்தீர் அரிஹரீ

76 குவலயாபீடத்தைக் கண்டீர் அரிஹரீ
கொன்று அதன் வீரங் குலைத்தீர் அரிஹரீ
சாணூரன்முஷ்டிகளைத் தள்ளி அரிஹரீ
தமையனுடன் கூடிஜயித்தீர் அரிஹரீ

77 கம்ஸனுடமஞ்சத்தில் குதித்தீர் அரிஹரீ
கிரீடம்சிதறிவிழக் கொன்றீர் அரிஹரீ
எட்டுப்பேர் தம்பியர்கள்கிட்ட அரிஹரீ
இராமருட ஆயுதத்தால் மடித்தீர். அரிஹரீ

78 அண்ணருடன் கூடியே கிருஷ்ண அரிஹரீ
அன்னை தந்தை யடிவணங்கி நின்றீர். அரிஹரீ
தந்தைதாய் சிறைநீக்கி கிருஷ்ண அரிஹரீ
ஜயமடைந்து அவர்களுடனிருந்தீர் அரிஹரீ

79 வஸுதேவர் தேவகியும் மகிழ்ந்து அரிஹரீ
மைந்தர்களைத் தழுவியணைத்தாள் அரிஹரீ
தழுவியே முத்தமிட்டுத் தாயார் அரிஹரீ
தன்னுடைய சோகந்தணிந்தாள் அரிஹரீ

80 சோதையுடன் நந்தரையும்போற்றி அரிஹரீ
சொந்தமுடன் கோகுலத்தில்சேர்ந்தே அரிஹரீ
யசோதையுடவாஞ்சையினால் கிருஷ்ண அரிஹரீ
இருவருக்கும் மைந்தராயிருந்தீர் அரிஹரீ

81 சொந்தமுள்ள மைந்தருக்குத் தந்தை அரிஹரீ
சிறப்புடனே உபநயனஞ்செய்தார் அரிஹரீ
மகரிஷிகள் அந்தணர்கள் மகிழ அரிஹரீ
வரிசையுடன் தானம் வழங்கி அரிஹரீ

82 பசுக்களுடன் கன்றுகளைக் கிருஷ்ண அரிஹரீ
பிராமணர்கள் மகிழ அளித்தார் அரிஹரீ
போஜனங்கள் பண்ணியே அளித்தார் அரிஹரீ
பந்துஜனங்களுடன் வசித்தீர அரிஹரீ

83 உக்கிரசேனராஜாவை யழைத்தே அரிஹரீ
உரிமையுடன் ராஜ்ஜியமளித்தீர் அரிஹரீ
சாந்தீபமுனிவரிடஞ் சென்றீர் அரிஹரீ
சகலவித்தையுங் கற்றுக்கொண்டீர் அரிஹரீ

84 பஞ்சசனனைக்கொன்று கிருஷ்ண அரிஹரீ
பாஞ்சஜன்ய சங்கமடைந்தீர் அரிஹரீ
காலன் யமதர்மரிடஞ் சென்றீர் அரிஹரீ
குரு சுதனை மீட்டுக்கொடுத்தீர் அரிஹரீ

85 உத்தவரையுபசரித்து அனுப்பி அரிஹரீ
குற்றமற்ற கோபியர்க்குச்சொன்னீர் அரிஹரீ
கோபியர்கள் உத்தவரைக்கண்டாள் அரிஹரீ
கிருஷ்ணனைக் கொண்டாடியிருந்தாள் அரிஹரீ

86 சிசுபாலன் கருவம் அடக்கி அரிஹரீ
ஸ்ரீ ருக்மணியை அடைந்தீர் அரிஹரீ
அஷ்டலக்ஷ்மியுடன் கிருஷ்ண அரிஹரீ
அழகான துவாரகையில் வசித்தீர் அரிஹரீ
ஓம்—தத்—ஸத். அரிஹரீ

## மானஸிக காசி யாத்திரை.

1 ஸத்குருவின் கிருபையினால் (காசி) யாத்ராமகிமை
சங்கிரகமாய்ச்சொல்லுகிறேன் சாதுக்கள் மகிழ

2 புத்தியினால் நிச்சயிக்கும் சிருஷ்டிகளெல்லாம்
போதமயமாயிருக்கும் பூர்ணவடிவாய்

3 தேசாந்தரங்கடந்து சோஷிக்குமாப்போல்
தசேந்திரயங்களையும் படிய அடக்கி

4 ஆதாரகங்கையென்று உற்சாகமாய்ச்சொல்லும்
ஆனந்தஸ்வரூபந்தன்னில் நிரஞ்சனமுமாய்

5 அகங்காரமுதலான அந்தக்கரணத்தின்
அகந்தை மமதைஎன்ற வைரியைவிட்டு

6 காமக்குரோதப்பகைவரை கிட்டவொட்டாமல்
விவேகமென்னும் சத்வாஸனையுடனேயிருந்து

7 ஸ்தூல சூக்ஷ்மமாயிருக்கும் ராஜ்ஜியம்விட்டு
ஏகாக்கிர சிந்தைஎன்னும் வாகனமேறி

8 ஏகபோகமாயிருக்கும் காசிதனிலிறங்கி
ஹிருதயசுத்தியாகவே த்யானமும்செய்து

9 ஈஷணத்ரயங்களென்னும் வாசனை போக்கி
இந்திரியங்கள்பதினாலுமுள்ளேயடக்கி

10 இடைபிங்கலையென்ற இரண்டுநாடியை
யமுனை கங்கையாகப் பாவித்தென்னுள்ளே

11 சுஷும்னவென்றதொரு நாடியைத்தானே
ஸரஸ்வதியாமந்தர் வாகினியுங்கூடி

12 திருவேணிசங்கமத்தில் தீர்த்தங்களாடி
த்ருதாபமற்றதொரு வெண்பட்டுடுத்தி

13 நிஷ்களங்கமாயிருக்கும் ஜபதபம்செய்து
நித்யானந்தமாயிருக்கும் கோயில்புகுந்து

14 பக்தியுடனம்மைமகிழ் விச்வநாதரைப்
பிரதிதினமும் தரிசித்து உள்ளேயிருந்தேன்

15. அறிவென்றவிசாலாக்ஷி அம்மனுமப்போ
ஆகாமியசஞ்சிதங்கள் இரண்டுமறுத்தாள்

16 தாரகபிரம்மமென்ற விச்வநாதரும்
சந்தோஷமாய் கங்கா ஸ்நானம் பண்ணுக என்றார்

17 அற்புதமாய் விச்வநாதர் கிருபையினாலே
ஆனந்தகங்காஸ்நானம் பண்ணிப் பிறகு

18 பக்தியுடன் ப்ரயாகையில் ஸ்நானங்கள் செய்து
பரிபூர்ணமான மணிகர்ணிகையாடி

19 கங்கையுடன்யமுனை ஸரஸ்வதிமுதலாம்
கீர்த்தியுள்ள அறுபத்துநாலு தீர்த்தங்களாடி

20 சப்தஜன்மமீடேற வடவிருக்ஷத்தின் கீழே
நித்தியதிருப்தியாக வெகு பிண்டமும்போட்டு

21 தத்துவங்கள் தொண்ணூத்தாறு கயாவாளிக்கும்
சந்தோஷமாக வெகு திருப்திகள் பண்ணி

22 நித்தியாநித்தியவஸ்து வென்னும் காவடிகட்டி
நிரந்தரப்பிரம்மமென்னும் கங்கையைத்தூக்கி

23 ஸத்ஸங்கமென்னும் ஸோபாதிகளோட
சிரவணமனனமென்னும் மார்க்கமுந்தாண்டி

24 ஜனனமரணமற்ற ராமேச்வரத்தில்
ஸ்திரயோகமாகவங்கே வந்தேயிருந்து

25 அக்கியானத்தினால்வந்த துக்கங்கள்தீர
ஆனந்தஸாகரத்தில் ஸ்நானமும்பண்ணி

26 ஆதியந்தமற்றிருக்கும் இராமநாதர்க்கு
அறிவென்னும் கங்கைகொண்டபிஷேகம்செய்து

27 ஜ்யோதிர்மயமாயிருக்கும் இராமநாதரை
சித்தத்துக்குள்ளேவைத்து தரிசனம்பண்ணி

28 அகண்டபரிபூர்ணமாய் அசஞ்சலமாய்
ஆனந்தப்பிரம்மந்தன்னில் ஐக்கியமானேன்.

ஓம்—பிரம்மார்ப்பிதம்.

---

## மானஸிக சேது ஸ்நானம்.

1 திருவாழிதனை வாங்கி சீதையம்மன் கைக்கொடுத்து
மாருதியும்சேதிசொல்லிவந்தார் ர்ர்மர்
திரளானசேனையுடன் சுக்ரீகிவராஜருடன்
தர்ப்ப சயனத்தில் வந்தார்
இந்தக்

2 கதைசாரந்தனையுரைக்க கந்தனுக்குமுன்பிறந்த
கல்பகமே உற்றதுணைவா
லோககுருவாயிருக்கும் ரகுநாதநந்தருட
பாதபத்மத்தில் பணிந்து

3 ஆசைஎனக்குண்டான காமக்ரோதலோபமோக
ஆங்காரக் காட்டைக் கடந்து
தேசப்பிரசித்தமுள்ள நவபாஷணத்தில்வந்து
(இனிவரும்) ஜன்மத்தை ஒழித்துவிடுவோம்

4 சேதுநாதஸ்வாமி பரதாரவிந்தத்தை
ஸேவைபண்ணி ஈடேறிப்போவோம்
பஞ்சமகாபாதகமும் வியாதியும் பீடையும்
பரிஹரிக்கும் ராமருடசேதுமகிமை

5 நெஞ்சுநிலை இல்லாமல் பஞ்சுபோலவேபறந்து
தேசகாலம் ஏன்போக்குகிறாய்
நஞ்சுள்ளகண்டரை ராமநாதப் பிரபுவை
கண்டவுடன் ஜன்மமெல்லாம்

6 செஞ்சூளை போட்டெடுத்த பொன்கள்போலவே துறங்
(பாபம்) சேராமல் ஒழிந்தோடிப்போம் [கும்
அறிந்தறிந்தும் ஸம்ஸாரத்துரவிலேபோய்விழுந்தால்
ஆர் எனக்குத் துணையாகிறார்

7 வெறிபோல ஸம்ஸாரத் துரவிலேபோய்விழுந்து
வீணுக்கேன் உழன்று சாகிறாய்
கரிபோன்றகடாவிலேறி எமனும்வரக்காலமானால்
கண்டவுடன் விழிக்கப்போகிறாய்

8 தேசிகர் சொன்னபடி நடக்கவுந்தெரியவில்லை
தெரிந்திருந்தும் அறியவில்லையே
ஆனாலும் உன்னுடைய ஆங்காரப்பாழ் ஜீவன்
ஆனந்தமடையவொட்டுமோ

9 ரஜ்ஜுவில் சர்ப்பம்போல கந்தர்வ நகரம்போல
சுத்தியில் வெள்ளிபோலே யிந்தப்
பொய்க்கூட்டை நம்பினல் கல்பகாலமானலும்
போதம் தன்னையறிய வொட்டுமோ

10 சச்சிதானந்தரைக் கோவிந்தமூர்த்தியை
ஸ்ரீ.விஷ்ணுவை ராமநாதரை
சத்குருபாதத்தை துணையாகவேகொண்டு
தனுஷ்கோடி நீராடவா

11 வேதாந்தசாஸ்திரத்தை காதினல்கேளாமல்
வீண்பொழுது ஏன்போக்குகிருய்
உயிரின்மேல் ஆசைவைத்து தேகத்திலேகாங்க்ஷை
ஓடி யோடி ஏன் மாய்கிருய் [யுடன்

12 (நற்) கதியுனக்கு வேணுமென்ருல் கந்தமாதனப்
பரிவுடனே போயிருந்து [பர்வதத்தில்
நெறிவுடனேவேண்டினல் பருவதவர்த்தனியும்
நினைத்ததெல்லாம் கொடுப்பனவளே

15 கலியிலே முழுகாமல் ராமநாதப்பிரபுவந்து
கடத்திவைப்பர் ஸம்ஸாரஓடத்தை
விஷயசுகம் புஜிப்போமென்று வேண்டியே நீ திரிந்து
இந்தவீட்டுத் தீக்குள்ளே இருந்து

14 (நாளைக்) காட்டுத்திபோலவே எமகிங்கரன் வரவை
கண்டவுடன் விழிக்கப்போகிருய்
முடுக்கிமுடுக்கி சுவாஸம் இழுக்கிறதும் துடிக்கிறதும்
மூர்ச்சை போட்டுப்போகின்றதும்

15 கால எமன் இழுக்கிறதும் தூதர்முன்னே விழிக்கிற
தேகத்தின்மேல் ஆசைவிடுத்து [தும்
தாகமெடுத்தலையும்போதும் தலைபுரட்டல்கொள்ளும்
தர்மந்தனைக் கேட்கப்போறாயோ [போதும்

16 வாதுகளும் பேசாதே தத்வார்த்தநிலை தன்னில்
(உந்தன்) சிந்தைதன்னை நிறுத்து மனதே
மிருத்யுவுக்குப்பிடாரியிலே வீட்டைக்கட்டிக்கொடுத்து
விஷ்ணுமாயக் காட்டிலிறங்கி

17 படுத்தபாம்புபோலே அசந்துபோயக்கிடக்கிறயே
ஸம்ஸாரசாகரத்திலே
(உன்னை) எடுத்துவிட்டுக் கரையேற்றிப்போகவழி
[காட்டினாலும்
ஹிதமாய் இருக்க வொட்டுமோ

18 பார்த்தவுடன் சேதுவை போக்கிவைக்கும் எமபயத
பக்தியுடன் நீராடிவா [தை
பஞ்சாக்னிமத்தியிலே தபஸுகள் பண்ணவேண்டாம்
மரவுரியைத் தரிக்கவேண்டாம்

19 காய்கிழங்கு பக்ஷித்து உலர்ந்து போகவேண்டாம்
காடுதனில் வசிக்கவேண்டாம்
ஆச்சரியமான ராமேஸ்வரத்தை தரிசிக்காமல்
ஆருக்காக உழன்று சாகிறாய்

20 அற்றகொம்பின் பழம்போல மனமறியச்சொன்னா
அஞ்சி அஞ்சி ஏன் திரிகிறாய் [லும்
சுத்தமண்டலம்போல மனதுதெளிவாகி நீ
சேதுஸ்நானம் பண்ணிவருவாய்

21 அன்பான தசரதனுர் அறிமுறையோர்வயிற்றினிலே
ஸ்ரீ ராமாவதாரமாகி (அவர்)
பொன்னுனகையினுல் சேதுவில் ஸ்தாபித்து
பூஜைசெய்த ராமலிங்கத்தை

22 அண்டர்கள்நாயகரின் ஆதிபரமேஸ்வரரின்
அடிமையாகி நீயும் மன்ற தே
துக்கமெல்லாம் போக்கி ஜன்மமெல்லாம் ஒழிக்க
சேதுஸ்நானம் பண்ணிவருவாய்.

ஓம்—பிரம்மார்ப்பிதம்.

---

## ஸ்ரீராமர் இராமேஸ்வரத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தல்.

1 பவழநிறத்தழகா பச்சை உமையாள்மகனே
கடலையுடன் தேங்காயும் காராமணிப்பயிரும்
அப்பமுடன் எள்ளுருண்டை அதிரசமும்மோதகமும்
தப்பாமல்நான் படைப்பேன் சக்திகணபதிக்கு.

2 விக்கினங்கள் இல்லாதே விநாயகரே முன்வருவீர்
வேல்வரே கூடநின்று வேண்டும்வரமருள்வீர்
திருமாலும்லக்ஷ்மியும் மஹாதேவர் ஈச்வரியும்
வாணிசரஸ்வதியும் வரமளித்துக் காத்தருள்வீர்

3 அஸுரர்குலம் வேரறுத்த ஆதிர்குலராமர்
கடலில் அணைகட்டி கமலவல்லிஜானகியை

தசமுகனைஸம்ஹரித்து சிறைமீட்டுவந்தபின்பு
சுற்றும்நம்மை பிரம்மஹத்திதோஷமென்று
ராமர்கண்டார்

4 திருவணைக்குபக்கத்தே சேதுக்கரைதனிலே
பாணலிங்கம்வைத்து பிரதிஷ்டைபண்ணி பூஜை
[செய்தால்
பழிப்பாவம் அண்டாது பாபங்கள் நீங்கிவிடும்
என்றுமந்தராமர்சொல்லிஏற்றமுள்ள இஷ்டருடன்

5 சுயஞ்சோதியானலிங்கம் சிவனிடத்தில் வாங்கியிங்கே
அதிதுரிதமாய்வருவீர் ஹனுமானே என்றுரைத்து
சுபமான இத்தினத்தில்சிவபிரதிஷ்டைசெய்திடுவோம்
இமைப்பொழுதில்வாருமென்று இராகவருந்
தானனுப்பி

6 சங்கல்பஞ்செய்துகொண்டு ஸ்ரீராகவருஞ்சீதையுடன்
சேதுமகத்துவத்தைச் சகலருக்குந்தானுரைத்து
தம்முடைய இஷ்டருடன் ஸ்நானங்களாடிவிட்டு
ஜபும்தர்ப்பணம்முடித்து தானங்கள்தான்கொடுத்
[தார்

7 கோதானம் பூதானம் ஸ்வர்ணதானங்கொடுத்தார்
கொம்பனையாள் சீதையுந்தன்னுடனிருந்த ஸ்த்ரீ
களுடன்
சாகரத்தின் வெண்மணலை சிவலிங்கமாய்ப்பிடித்து
பொற்கொடியாள் சீதையப்போ பக்தியுடன் பூஜை
செய்தாள்

8 இராகவ்ருந்தம்பியுடன் இலங்கைவிபீஷணரும்
சுக்கிரீவராஜருடன் சேனைகளுஞ்சூழ்ந்திருந்தார்

அந்தணர்கள் மகரிஷிகள் அனைவர்களுஞ்சேர்ந்
திருந்தார்
அன்பர்களைப்பார்த்து அபிராமர்சொல்லிடுவார்
9 அமருதயோகந்தனிலே ஹரனைபிரதிஷ்டைபண்ண
வாய்ந்தநல்ல முகூர்த்தமிது மாருதியைக் காண
வில்லை
சிற்றிடையாள் சீதையுட் செங்கமலக்கையதனால்
மணலால்பிடித்தலிங்கம் பூஜைபண்ணிவைத்
திருந்தாள்
10 அந்தமகாலிங்கத்தை அர்ச்சனைகள் செய்திடுவோம்
என்று ரகுராமர்சொல்ல் எல்லோரும் தானிசைந்
தார்
பாற்கடல் நாதர் பிரதிஷ்டை செய்தார் பாருலகில்
ராமனுதலிங்கமென்றுராகவருந்தான் ஸ்துதித்தார்
11 கீர்த்தியுள்ள கங்கைநதி கிட்டவரவேணுமென்று
தீர்க்கமுடன் வில்லெடுத்து சேதுவினில் ஊன்றி
வைத்தார்
குத்தலுமே கங்கையம்மன் குதித்துவந்தாள்
நிர்மலமாய்
சித்திரமாம்பொன்குடத்தில் ஸ்ரீ ராமர்
தானெடுத்து
12 பச்சை வில்லும்துளஸீ பரிமளவாசனை சேர்த்து
கலசபூஜை சங்கபூஜை காகுஸ்தராமர் செய்தார்
ஜயஜயவென்றுசொல்லி தேவர்கள் வாத்தியம்
முழக்க
சிவருத்திரந்தன்னை அந்தணர்கள் தான்ஜபிக்க
13 பொற்கமலநாதர் புருஷோத்தமரும் பக்தியுடன்
முக்கண்ணர்சங்கரர்க்கு மூவுலகுங் கொண்டாட
அச்சுதராம் ஸ்ரீ ராமர் அபிஷேகம்பண்ணிவைத்தார்
பச்சைமுகில்மேனியரும் பட்டாடை சாத்தி
விட்டார்

14 சந்தனங் குங்குமமும் சங்கரர்க்கும் பார்வதிக்கும்
மங்களராகவரும் வாஸனையாய்ப்பூசிவிட்டார்
பரிமளபுஷ்பங்களினுல் மாலைகளும் போட்டுவிட்டார்
பச்ரை வில்வம் துள்கி பரிமள புஷ்பங்களால்

15 இராமலிங்கமூர்த்தியென்று சிவநாமங்களை யுரைத்து
செங்கைமலர்க்கையதனுல் ஸ்ரீராமர் அர்ச்சித்தார்
மூவருக்கும்மேலான மூர்த்தி சிவாயநம :
முனிவர்தேடியறியாத முதல்வா சிவாயநம :

16 மானும்மழுவுந் தரித்தீர் சிவாயநம :
மறலியைக் காலால் உதைத்தீர் சிவாயநமඃ
சூலபாணிசுடரொளியே சிவாயநம:
ஜோதிமயமானபரம் பொருளே சிவாயநம:

17 பால்போன்றமேனிப் பரனே சிவாயநம :
பஞ்சாக்ஷரத்தின் பொருளே சிவாயநம:
காளிமைவாதுக்கழைத்தீர் சிவாயநம :
கனகசபையில் நடித்தீர் சிவாயநம :

18 திருபுரந்தன்னை எரித்தீர் சிவாயநம:
சேதுநகர் ஸ்ரீ ராம நாதா சிவாயநம :
கங்கைதரித்த ஸ்ரீ கண்டா சிவாயநம :
கலையைமுடியில் அணிந்தாய் சிவாயநம :

19 தூபமுடன் தீபமிட்டார் ஸ்ரீ ராமர் சங்கரர்க்கு
நிர்மலமூர்த்திக்கு நைவேத்தியம் பண்ணி
வைத்தார்
அர்க்யங்கொடுத்து ஹாரத்திக்காப்பெடுத்தார்
புனர்பூஜை பண்ணியவர் பஞ்சாக்ஷரஞ் ஜபித்தார்

20 பொன்னுலகத்தேவர்களும் புஷ்பவருஷஞ் சொரிந்தார்
ரம்பையுடன் ஊர்வசியும் நர்த்தனங்கள் பண்ணி நிற்க
சுந்தரமாங்கந்தருவாள் சங்கீர்த்தனம்பாட
வந்திருந்த மகரிஷிக்ள் வேதங்களால் ஸ்துதிக்க

21 பிரதக்ஷிணங்கள்பண்ணி பரமருடதாள்பணிந்து
கௌஸல்யாராமர் அப்போ கைகூப்பித்தான் ஸ்துதித்தார்
திருமுடியும்செஞ்சடையும் , திகழ்காதுக்குண்டலமும்
கதிரொளிபோல் திருமுகமும் கனிபவழச் செவ்வாயும்

22 கிருபைமொழியுங்கண்பலரும் குமிழ்போன்ற திருமூக்கும்
திருவுருவைஎந்நாளும் சிந்தைவிட்டுநான் மறவேன்
பற்றிவரும் தீவினையும் பஞ்சமகாபாதகமும்
சுற்றிவரும்தோஷமெல்லாம தீர்ப்பாய் தூயபரனே

23 சேதுவினில்நீராடி ஸ்ரீ ராமலிங்கத்தைப்பணிந்த
ஜீவர்களின் பாபமெல்லாம்போக்குமையா சங்கரரே
பக்தியுடன் வேண்டியந்தப் புண்ணியராம் ராகவரும்
ஸ்தோத்திரங்கள் செய்து திருவடியிலேபணிந்தார்.

24 பக்ஷியம் போஜனமும் பரமருடபிரசாதமெல்லாம்
அந்தணர்கள் தம்முடனே இஷ்டருக்கெல்லாமளித்தார்
தாம்பூலந்தக்ஷிணைகள் சகலருக்குந்தான் வழங்கி
சற்குணராமர்சபைதனிலே வீற்றிருந்தார்

25 மகாலிங்கங்கொண்டுவந்தார் வாயுகுமாரர் அப்போ
அபிராமர் பாதமலர் ஹனுமார் பணிந்துநின்றா

தேவர்பிரதிஷ்டைசெய்து பூஜித்ததையறிந்து
சிந்தைமிகவருந்தி ஹனுமாருஞ்சொல்லலுற்ருர்

26 சொன்ன சொல்லைத்தவருத ஸ்ரீராமா நீருமிப்போ
என்னையனுப்பிவிட்டு ஈச்வரபூஜைசெய்தீர்
சிவலிங்கங்கொண்டுவந்தேன் சொல்லும்தவருமல்
துரிதமாய் ஓடிவந்தும் சிறுமைதன்னை நானடைந்தேன்

27 என்னுடைய ஜன்மமும வாழ்கையும் வீணுச்சே
என்னை எங்கள் அஞ்சனையாள் பெற்றெடுத்து ஆளாக்கி
சுக்கிரீவ ராஜனுக்கு (சிறந்த) அமைச்சனுய்த் தானிருந்தும்
சுந்தரராமா உமக்குத் தோழனுய் நானமைந்தும்

28 இந்தக்கடல்தனை நான் இமைப்பொழுதிலே தாண்டி
ஜானகியைத்தேடியெங்கும் கண்டேஜயமடைந்து
வனங்களெல்லாம் தானழித்து ராக்ஷஸர்களை வதைத்து
வாலில்இட்ட தீயதனுல் வனங்களையுஞ்சுட்டெரித்து

29 திரும்பிவந்து உம்மிடத்தில் சூடாமணியளித்து
தொண்டனுய்நானிருந்து சுமந்துகொண்டு வாகனமாய்
சண்டை அமர்க்களத்தில் தாஸனுய்நான் அலைந்து
சேனைகளுந்தான்பிழைக்கச் சஞ்சீவிகொண்டு வந்தேன்

30 காகுத்ஸ்தராமா உங்கள் கட்டளையுந்தப்பாமல்
சுயஞ்சோதியானதொரு சிவலிங்கம் கொண்டு வந்தேன்

இந்த அவமானம் செய்தீரே நீருமென்னை
மறவேன் நானென்று சொல்லி மாருதியுந்தான் வருந்த

31 அபிராமர்கண்டிரங்கி ஹனுமாரைக்கிட்டழைத்து
கௌஸல்யாராமர் அவரைக்கையாலெடுத்தணைத்து
அழுதமலர்க்கண்ணீரை அங்கையினாலேதுடைத்து
அனுமார்துயர்நீங்க அபிராமர் சொல்லிடுவார்

32 என்னதென்றும் உன்னதென்றும் பேதமில்லை எந்தனுக்கு
அத்வைதமானவரே ஆத்மாவே லிங்கமன்றோ
நல்லதொருகாலமென்று நானுமிங்கே பூஜைசெய்தே
வித்யாஸம் எண்ணாதீர் மாருதியே நீருமிப்போ [ன்

33 என்னுடையலிங்கம் உம்மால் எடுத்தெறியப்போமா
வந்துபிடுங்கி எறிந்துவிடுமென்று சொன்னார் ஞ்ல்
சொன்னவுடன் மாருதியும் துடுக்காய் எழுந்திருந்து
கோபத்துடன்உருமிக் குரங்கின் குணங்காட்டி

34 ஆவென்று வாய்திறந்து அகங்காரத்தாலெழும்பி
காமனைக்கண்ணாலெரித்த காலகாலனென்லெண்
வாலாலே சுற்றி மஹாதேவர்மேனிதன்னை [ணாதே
ஆகாசத்தில்கிளம்பி அப்புறத்திலேவிழுந்தார்

35 நாசியுடனேமுகமும் நவத்துவாரமும்திறந்து
இரத்தம்பெருகிவர சுவாசமற்றுத்தான் கிடந்தார்
கண்டவுடன் எல்லோரும் கடலோசைபோலிரைந்து
ஐயோ ஹனுமாருக்கு ஹானிவந்ததென்றழுதார்

36 செங்கமலக்கண்சிவக்க சீதைமிகத்தானழுது
அவளங்கமலக்கையாலே ஹனுமாரைத் தான்
துடைத்து
மாருதியேஎன்னுயிரை வாஞ்சையுடன் காத்தவரே
அமங்களமாய் அவமிருத்யு வருமோ ஹனுமானே

37 என்றுசொல்லித் தான்வருந்தி மாருதியைத் தானெ
டுத்து
செங்கமலநாதருட திருவடியின்கீழ் போட்டாள்
ஹனுமார்முகந்துடைத்து அபிராமர் தான்புலம்பி
அஞ்சனையாள் பெற்றெடுத்த அறிவுடைய
புத்திரனே

38 சிரஞ்சீவி நீயுமன்றோ என்னுடைய தெய்வமன்றோ,
ஜானகியை நான்பிரிந்து தவிக்குமந்தவேளையினில்
அஞ்சாதீர் என்றுசொல்லி அவனியெங்குஞ் சென்றலைந்து,
அலைகடலைத்தாண்டி அணியிலங்கைதான் புகுந்து

39 சீதையரைக்கண்டு திருவாழி தானளித்து
வந்தெதிர்த்த ராக்ஷஸரை மடியவேஸம்ஹரித்து
இலங்காபுரிநகரைத் தீயால் எரித்துவிட்டு
திரும்பிவந்துஎன்துயரை தீர்த்துவிட்ட சுந்தரனே

40 கமலதளம் போன்றிருக்கும் கண்களிலேநீர் பெருகத்
தலைமுதல் கால்வரைக்கும் தாமரைக்கையால்
துடைத்தார்
காகுத்ஸ்தராகவனர் கருணையுடன் தொட்டவுடன்
கண்ணின் நீர்பட்டவுடன் களைதெளிந்து
மாருதியும்

41 அன்புடைய ராமருட ஆசிர்வாதங்களினுல்
மூர்சைதெளிந்து எழுந்து நின்ருர் மாருதியும்
அன்புடையராமாஎன் அபசாரம்தான் பொருத்து
அடியேன்கொணர்ந்தலிங்கம் ஆராதனைகள்செய்ய

42 அனுமதியுந்தாருமென்று ஆஞ்சனேயர் கேட்கலுமே
அச்சுதராமரப்போ அதிகசந்தோஷமுடன்
ஹனுமார்கொணர்ந்தலிங்கம் அருகில் பிரதிஷ்டை பண்ணி
ஆராதனைகள்செய்து அன்புடனே பூஜைபண்ணி

43 சாலியான்னம் சித்திரான்னம் நைவேதனங்கள் செய்து
சபையினுள்ளோர்தங்களுடன் திருப்தியுடனே புஜித்தார்
மாருதியுங்கொண்டுவந்த மூலமுதல் லிங்கமக்த
முக்திவந்துகண்டவர்கள் மோக்ஷபதமடைவார்கள்

44 என்றுசொல்லி வாழ்த்தியவர் இராமேச்வரத்தில் நின்று
இன்பமுள்ள புஷ்பக விமானத்தில் ஏறியவாள்
வைகுண்டவாழ்பதியும் அயோத்தியாபுரத்தில்வந்து
மாதா மனமகிழ மணிமகுடஞ்சூடிநின்ருர்

45 சீதாசமேதராய் ஸிம்மாஸனத்தில் வீற்றிருந்தார்
தேவ்ரிஷிகள் துதிக்க தம்பிமார்கள் கூடிநிற்க
வசிஷ்டமகாமுனிவர் மணிமகுடஞ்சூட்டி நிற்க
கௌஸல்யாராமர் காட்சியுடன் சேவைதந்தார்.

ஓம்—தத்—ஸத்.

---

# ஸ்ரீ கிருஷ்ண பகவான் பாண்டவர்களுக்கு உபதேசித்த மானஸிக பூஜை.

## விநாயகர் வணக்கம்

1 தும்பிமுகத்தவரே தொப்பைக்கணபதியே
முன்கைமுகத்தவரே மூஷிகவாகனரே
2 மோதகத்தைக் கையில்தரித்த கணபதியே
கந்தனுக்குமூத்த கணபதியே முன்னடவும்
3 அப்பம்பொரியவலும் சர்க்கரையும் எள்ளுருண்டை
பக்குவமான பலாப்பழமும் தேங்காயும்
4 செவ்விளநீரும் தேன்பாகும் சர்க்கரையும்
முப்பழங்கள் தன்னுடனே விநாயகரே நான்
படைப்பேன்
5 சற்குணனார் பூஜைதன்னை சற்றேதெரிந்துரைக்க
வாணிசரஸ்வதியும் விநாயகரும் முன்வருவீர்.

## பாண்டவர்கள் வரலாறு

6 பாண்டவர்களைவர்களும் பாஞ்சாலிதன்னுடனே
(அவர்கள்) தேசம்பரிகொடுத்து திரவியமெல்லா
மிழந்து
7 கானகத்தில்நடந்து காமியவனத்தில்வந்து
அநேகமுனீஸ்வராளும் அந்தணரும்சூழ்ந்திருக்க

8 அதிசோகத்துடனிருந்தார் பாண்டவர்களெவர்களும்
கிலேசமெல்லாம்போக்கவென்று கோபால
கிருஷ்ணன் வந்தார்

9 வந்தகிருஷ்ணஸ்வாமிக்கு மலராஸனம்போட்டு
அவரண்டையில்தர்மர் அதிசோகத்துடனிருந்து

10 அச்சுதரே கேளுமையா இந்த அகிலஜனங்களுக்குள்
எங்களைப்போல் ஜன்மம் ஒருவரையுங்கண்டதில்லை

11 (நாங்கள்) ஜன்மமெடுத்ததுன்பம் ஸ்ரீ கிருஷ்ணா
போதுமையா
எங்களுக்குநல்லவழி ஹிருஷீகேசா சொல்லு
மென்றார்

12 தர்மபுத்திரர்கேட்கலுமே சக்கரத்தார் தான்சிரித்து
உங்களுக்குநல்லவழி உபாயமொன்று சொல்லு
கிறேன்

## கிருஷ்ணபகவான் பாண்டவர்களுக்கு உபதேசித்தல்.

13 சந்ததமும் சிந்தையினில் சிவசங்கரரைக்கண்டு
கொண்டு
மங்களமாகவே தன் மானஸிகபூஜைசெய்து

14 சாம்பபரமேச்வரரை சரணமென்று நீரடைந்தால்
பூலோகம் கைவசமாய்ப் புவனமெங்குமாண்டிடுவீர்

15 காலாந்தரந்தனிலே கைலாசம்சேர்ந்திடுவீர்
பூஜைபண்ணுமென்றுசொன்னார் புண்ய
புருஷோத்தமரும்

16 கோவிந்தர்சொல்படிக்கு கிலேசமெல்லாம்விட்டுதறி
மாதவனுர்சொற்படிக்கு மஹாதேவசங்கரரை

17 மானஸிகமாக மனதில் நிலைநிறுத்தி
பூஜைபண்ணிக்கொண்டிருந்தார் பாண்டவர்
களைவர்களும்

18 வாரீர்நீர்பாண்டவர்காள் கேளீர்சிவமகிமை
ஆதிசிவன்மகிமை யாரும் அறியார்கள்

19 யாராலும் அவர்மகிமை அறியமுடியாது
ஆகாசவாணியுமாய் அகிலாண்டமூர்த்தியுமாய்

20 பூமிக்குதேவதையாய் பூரணஸ்வரூபருமாய்
பிரம்மனுமாய் விஷ்ணுவுமாய் (சர்வ) பூதகாரணமாய்

21 தேவரிஷிகளுமாய் விண்ணவராய் இந்திரனுமாய்
அந்தராத்மாவாய் அதிஷ்டான தேவதையாய்

22 சச்சிதானந்தரான சற்குணனுர்சீர்வடிவை
ஸ்ரீ கிருஷ்ணர்உரைத்திடவே கீர்த்தியுள்ள
பாண்டவரில்

23 வீமன்நன்றுயறிந்து விளங்கினுர் ஆத்மாவாய்
அகஸ்தியனுரும் அறிவார் சிவன்மகிமை

24 இன்னுமறிந்தவர்கள் சனகாதியோகியர்கள்
ஆதிப்ரகாசத்தை அகண்டவெளியானவரை

## ஆவாகனஞ் செய்தல்.

25 ஆத்மாவைஜீவன் அறிந்தவிதம் சொல்லுகிறேன்
தேகமே ஆலயமாம் ஜீவனே ஈச்வரனுய்

26 அகத்திலிருக்கும் அலர்ந்தசெந்தாமரையில்
புத்தியினுலறிந்து பிர்ம்மந்தனையடைய

27 ஐந்துபூதத்தால் அலையும் மனவாயுவை
கண்டத்திலே நிறுத்தி கண்ணாடிபோல்விளக்கி

28 அண்டமென்னும் பிண்டமதில் அகிலமெல்லாங்
கண்டுகொண்டேன்
பதினாலு உலகமுடன் பலநதியும் சாகரமும்

29 தேவாலயமும் சிவனிருக்கும் மண்டபமும்
தன் ஹிருதயந்தன்னிலே சகலமுமாய்பாவித்தேன்

30 கல்வருஷம்பெய்து கனவெள்ளமாய் ஓடி
ஆறும் அருவிகளும் வாய்க்காலும் ஓடைகளும்

31 கங்காநதியுடனே சமுத்திரத்திற்போய் விழுந்தால்
(அந்த) ஜலங்களை வெவ்வேறாய்ப்பிரித்திடவுமாகாது

32 (அதுபோல்) ஜீவன்முக்தியடைந்தால் திரும்பியும்
ஜன்மிக்காது
சூரியன்உதித்து ஜகங்கள் வெளியானாற்போல்

33 இருளானமாய்கை தள்ளி ஹிருதயவெளிகண்டு
கொண்டு
திடமாக பக்திபண்ணி சிவன்மேல்கருத்துமுண்டாய்

34 அதுவே பழக்கமதாய் அனுபோகமுண்டாகில்
இதுவே சிவதியானத்திற் கேதுவென்றார் மாதவரும்

35 அலையுமனவாயுவை ஆருதாரம்நிறுத்தி
ஆருத்ராமூலத்தில் அம்பிகையைக்கண்டு கொண்டு

36 அனலால்விளக்கி அம்ருதமழையில் முழுகி
அனாஹதச்சக்கரத்தில் ஹரனை அறிவாலறிந்து

37 (அந்தத்) தேவாதிதேவன் சிவனையுமையுடனே
அன்பென்னும்பொற்றளத்தின் மேலேயழகுபெற

38 செம்பொன்னும் இரத்தினமும் இழைத்த சிங்கா
சனத்தில்
ஹிருதய சிங்காசனத்தில் ஈச்வரனைக்கண்டு
கொண்டேன்

39 மணிப்பிரகாசம்போல்மாலைவிளக்கேற்றிவைத்தேன்
மல்லிகைபூத்தாற்போல் வரிசைவிளக்கேற்றி
வைத்தேன்

40 ஐம்பூதங்கன்னியால் ஹாரத்தியும்எடுத்தேன்
கண்டாமணியடித்தேன் கைலசநாதருக்கு

41 சிந்தையிற்குள்ளே சிவபூஜைசெய்திருந்தேன்
அகஸ்தியர்வேதமுனி அருந்தவஸிமாதவர்கள்

42 சப்தரிஷிகள் கலசபூஜைகள் பண்ணிஙிற்க
தேவரிஷிகள் சிவருத்திரங்கள் தான்ஜபிக்க

43 கீற்பகவிருக்ஷம் கனகவருஷஞ்சொரிய
அற்புதமாய்காமதேனு ஆவும்பாலைச்சொரிய

## அபிஷேகஞ் செய்தல்.

44 பொற்குடத்தில்பாலம்ருதம் போதமுடன் ஏந்திவந்து
அம்பிகைக்கும் சங்கரர்க்கும் அபிஷேகம்பண்ணி
வைத்தேன்

45 சொர்ணகலசத்தால் சுத்தோதகஞ்சொரிந்தேன்
கொம்பிலுள்ள தேனும் கோது இல்லாச்சர்க்கரையும்

46 காராம்பசுநெய்யும் கதலிப்பழத்துடனே
சேர்த்துகலந்து சிவன்முடிமேலேசொரிந்தேன்

47 இச்சிலிநார்த்தையுடன எலுமிச்சையின்ரஸமும்
சேர்த்துப்பிழிந்து சொர்ணகிண்ணமதிலே எடுத்து

48 சுந்தரமூர்த்தி சிரஸிலேதான்சொரிந்தேன்
எண்ணெயுடன்நெய்யும் ஈசருக்குநான்சொரிந்தேன்
49 நெல்லியுடன் சிகைக்காயும் நிறையவே சாத்தினேன்
மஞ்சளுடன்வாஸனையும் மாக்காப்புச் சாத்தினேன்
50 பன்னீருஞ்சந்தனமும் பக்தியுடன் சாத்தினேன்
நைவேத்தியமபண்ணினேன் நிர்மலமூர்த்திக்கு
51 கற்பூரஹாரத்தி எடுத்தேன் கைலாஸநாதருக்கு
ஏழுசமுத்திரத்தை ஹிருதயத்திலே அழைத்து
52 சப்தசமுத்திரத்தைத் தன்மனத்தினால் கொணர்ந்து
அறுபத்தாறுகோடி அற்புதமாந்தீர்த்தமெல்லாம்
53 மானஸிகத்தாலழைத்தேன் மஹாநதிதீர்த்த
மெல்லாம்
ருத்ராபிஷேகம் ஈசருக்குப்பண்ணிவைத்தேன்
54 கும்பாபிஷேகம் (கௌரீ) நாதருக்கும் பண்ணி
வைத்தேன்
பூர்ணாபிஷேகம் பக்தியுடன் பண்ணிவைத்தேன்
55 கங்காபிஷேகம் பரமேஸ்வரர்க்குப்பண்ணிவைத்தேன்
சுத்தகங்காஜலத்தில் திரும்பவும்பண்ணிவைத்தேன்
56 துளிர்போன்றபட்டதனால் துவட்டியவர்மேனிதன்னை
மாணிக்கபூஷணமும் மார்புதனில்சந்தனமும்.

## ஆபரணஞ் சாத்தல்

57 தேவரிடைமருங்கில் செம்பொன்பீதாம்பரமும்
அங்கியுடன்தொங்கும் அசையுமும் முப்பிரிநூலும்
58 யக்ஞோபவீதமும் உத்தரீயம்சால்வைகளும்
பட்டையுரை ஞானுடனே ஒட்டியாணக்கட்டழகும்

59 கட்டியலங்கரித்தேன் கடுகுருத்திரத்துடனே
தண்டையுடன்வண்டயமும் தாளடியிலேசிலம்பும்

60 ஐந்துவிரலாழிகளும் அஸ்தகடகத்தொளியும்
முன்கைமுதாரிகளும் மாணிக்கத்தோள்வளையும்

61 கொத்துசரப்பளியும் கண்டசரமாலைகளும்
முத்துடனேசொர்ணபுஷ்ப மோகனமாலைகளும்

62 தாளிபதக்கம் சங்கையற்ற பூஷணமும்
மார்புக்கிசைந்த் மணிமுத்து மாலைகளும்

63 ருத்திராக்ஷமாலைகள் ஈசருக்கும் பார்வதிக்கும்
நவரத்தினத்தாலிழைத்த பதக்கத்திலாயிரமும்

64 புஷ்பராகம்பதித்த பூஷணத்திலேகோடி
முக்கண்ணர்க்கும் தேவியர்க்கும் மார்பிலிடமன்றியிலே

65 ரத்தினமணியாபரணம் நிறைத்து அலங்கரித்தேன்
வஜ்ஜிரமணிகுண்டலத்தை மஹாதேவர்தோள்
புஜத்தில்

66 தொட்டுச்செவியில் அசைய சாத்தினேன்பக்தியுடன்
ஒன்பதுரத்தினத்தால் ஒளிபெறவேதானமைத்த

67 செம்பொன்மணிக்கிரீடம் சங்கரர்க்கும் பார்வதிக்கும்
மங்களமாய்ப்பூமுடிமேல் வைத்து அலங்கரித்தேன்

68 மணியிழைத்த பாதுகையும் மலரடியில்சாத்தி
விட்டேன்
அர்ச்சிக்கசொர்ணபுஷ்பம் அன்புடனேகொண்டு
வந்தேன்

## புஷ்பம் அலங்கரித்தல்.

69 இலக்கமற்ற புஷ்பவகை நீலகண்டசங்கரர்க்கு
கொத்தறுகு மந்தாரை குடமல்லிகைப்பூவும்

70 பச்சைதுளஸியும் பாரிஜாத புஷ்பங்களும்
மட்டற்றவேர்க்கொழுந்தும் மணமுள்ளமல்லிகையும்

71 (வில்வ) பத்திரத்திலேகோடி பருவதம்போற்குவித்தேன்
மலர்ந்தபுஷ்பத்திலனந்தம் மாலைகளுந்தொடுத்து

72 சங்கரர்க்கும் பார்வதிக்கும் சாற்றி அலங்கரித்தேன்
அற்புதப்புஷ்பவகை அரவிந்தம் சண்பகமும்

73 கொன்னைகுருக்கத்தி கொத்தரளி மந்தாரை
முல்லை இருவாக்ஷி மணமுள்ளசம்புங்கி

74 இடைக்கிடையே தொடுத்து ஈசருக்குச்சாற்றினேன்
ஸப்தரிஷிகள் சகஸ்ரநாமம் உச்சரிக்க

75 அலர்ந்தசெந்தாமரையில் ஆயிரம்பூ அர்ச்சித்தேன்
ஆதிமூர்த்தியுமுகந்தார் அலங்காரப்பூஜைதன்னை

## நைவேத்தியம் செய்தல்

76 தேவருகந்து திருமணையில் வீற்றிருந்தார்
ராஜான்னம் சம்பான்னம் இஷ்டமுடனே கொணர்ந்தேன்

77 பருப்பும்பொரிக்கறியும் பத்துவகைபச்சடியும்
காராவின்நெய்யும் கரும்புரஸம் தேனுடனே

78 திரட்டுப்பால் தேன்குழலும் செவ்விளநீர்கொண்டுவந்தேன்
சக்கரைப்பொங்கலுடன் சித்திரான்னம் பலவிதமாய்

79 ஆமவடைபேர்ளியும் அப்பளமும் பாயஸமும்
கதலிப்பழமும் கண்குழிந்தமாம்பழமும்

80 சொளையுடனேநிறைந்த தித்திக்கும்பலாப்பழமும்
மதுரவிளாம்பழமும் மணப்பாகும்தேன்பாகும்

81 மதுரமுள்ளசெந்தேனும் வகைவகையாய் பாயசமும்
சுத்தகங்காதீர்த்தம் (சொர்ண) கெண்டியிலே
கொண்டு வைத்தேன்

82 திருத்தியசெங்கரும்பும் செவ்விளநீர்குலையும்
உடைத்ததேங்காய் கோடி உடையாத தயிர் நூறுபடி

83 குடத்துநெய் மேற்சொரிந்து கொம்புத்தேன்
கூடவைத்து
பரத்தித்தளிகைதன்னை பட்டினல்மூடிவந்தேன்

84 சாம்பிராணி தூபதீபம் (சிவ) சங்கரபார்வதிக்கு
வாஸனையாய் எடுத்தேன் வணக்கமொடுக்கமுடன்

85 கண்டாமணியடித்தேன் கைலாஸநாதருக்கு
சுத்தோதகத்தாலே சுற்றினேன் நைவேத்தியமதை

86 சுத்தகங்காஜலத்தால் சுற்றிபிரதக்ஷிணமாய்
அம்ருதோபஸ்தரணமஸிஎன்று ஆபோஜனம்போட்
டேன்

87 பக்தியுடன் பிராணாயஸ்வாஹா பண்ணிவைத்தேன்
ஆறுதரம்
பூரணருங்கௌரியுடன் புஜித்துதிருப்தியானபின்பு

88 பன்னீரால்வாயலம்பி பட்டாலேதான் துடைத்து
பூஜித்தடிவணங்கிபொன்னாஸனத்தமர்த்தி

89 சொர்ணமணித்தட்டதனில் சீவலுடன்வெற்றிலையும்
சாதிக்காய் ஏலமுடன் லவங்கம் ஜாபத்திரியும்

90 நீறுடனே வால்மிளகும் பச்சைக்கற்பூரம் குங்குமப்பூ
தாம்பூலம் கொடுத்தேன் சர்வக்ஞமூர்த்திக்கு

91 புனர்ப்பூஜை பண்ணினேன் (பரி) பூர்ண
வடிவானவர்க்கு
சோடசஉபசாரஞ்செய்தேன் தீபாராதனை எடுத்தேன்

92 நாகஹாரத்தி நானாவிதம் எடுத்தேன்
கற்பூரஹாரத்தி எடுத்தேன் கைலாசநாதருக்கு

93 தங்கரத்தினத்தாலிழைத்த சக்ரவாளக்குடை
பிடித்தேன்
இங்கிதமாய் முத்துக்குடை மூவாயிரம் பிடித்தேன்

94 பட்டுக்குடைபிடித்தேன் பரமசிவபார்வதிக்கு
விருதுகளும் தான்பிடிக்க வெகுவிதவாத்யம் முழங்க

95 குஞ்சம்பிடிக்க குடையும் நிழல்காட்ட
வரிசையுடன் காளாஞ்சி மங்கையரும் ஏந்திநிற்க

96 வெண்சாமரம்வீச விருதுகளும் தான் முழங்க
கட்டியம்போட கணிகைமார் பாடிநிற்க

97 மேளமுடன் நாதஸ்வரம் முன்னே எடுத்தூத
பேரிகைமத்தளமும் புல்லாங்குழலூத

98 முகவீணைஸ்வரமண்டலி முன்னே எடுத்தூத
பலவிதமாய்த்துதித்து பதினெட்டுவாத்தியமும்

99 திமிதிமி என்றூத தேவர்களும் பூச்சொரிய
அப்ஸரஸ்மாதர்களில் ஆயிரம்பேர் நர்த்தமிட

100 ரம்பையுடன் ஊர்வசியும் நர்த்தனங்கள் பண்ணிநிற்க
சந்ததமும் கந்தர்வாள் சங்கீர்த்தனம்பாட

101 சாஸ்திரங்களாறும் சதுர்வேதஸாரமெல்லாம்
ஏத்தமுடன் அந்தணர்கள் ஓதிப்புகழ்ந்துரைக்க

102 சூதமஹாமுனிவர் சகலபுராணங்கள் சொல்ல
தேவரிஷிநாரதரும் சங்கீர்த்தனம்பாட

103 பிரதக்ஷணத்திலே கோடிபண்ணிவந்தேன் சங்கரரை
நமஸ்காரத்தில்அனந்தம் வணக்கமுடனே பணிந்தேன்

104 பத்மாஸனத்திலிருந்து பஞ்சாக்ஷரம் ஜபித்தேன்
சகலகணங்களுடன் சண்டிநந்திகேச்வரருக்கும்

105 சிவப்பிரஸாதத்தாலவர்க்கு திருப்திகளும் பண்ணி
வைத்தேன்
மற்றும்பிரஸாதம் வழங்கினேன் எல்லவர்க்கும்

106 (நான்) தானும்பிரஸாதம் சம்பூர்ணமாய்ப் புஜித்து
பூவெடுத்து சிரஸில்வைத்து போற்றி அவரைப்
பணிந்தேன்

107 பொற்பீடத்தின் கீழிருந்து போற்றிப்பணிந் திருந்தேன்
பார்வதிநாதரைப் பணிந்து ஐக்கியம் நானடைந்தேன்

108 சக்கரத்தார் சொன்னபடி சாம்பபரமேஸ்வரரை
பக்தியுடன் வீமஸேனன் பண்ணிவந்த பூஜைதன்னை

109 பக்தியுடன் கேட்டவரும் சிரத்தையுடன் சொன்ன
வரும்
உற்றுகந்துநித்தியமும் உறுதியுடன் சொன்னவரும்

110 நித்தியம் நூறுலிங்கம் பூஜைபண்ணும் நற்பலனை
நிச்சயமாயடைவாள் என்றுரே அச்சுதரும்

111 பார்வதியாருடன்கூடப் பரமசிவனுரை
இப்படியே பூஜைபண்ணி ஹ்ருதயத்திற்கண்டவர்க்கு

112 மாயைவினை ஒழியும் மகாமோகம் நீங்கிவிடும்
தேஜோன்மயமான சித்திமயமாய்விடுவார்

113 ஆங்காரம்நீங்கி அருளின்மயமாய்விடுவார்
அம்பிகைநாதருடன் ஐக்கியமடைந்திடுவார்

ஓம்—பிரம்மார்ப்பிதம்

---

## ஸ்ரீரங்கநாத மானஸிக ஸ்தோத்திரம்.

(சூர்ணிகை)

1 ஹேதேவா நாவின்னப்பமுலு கைகொனிநன்னு
ரக்ஷிம்பவே ரங்கேசா
நா சங்கல்பவிகல்பமுலு நீகு உபயகாவேரிமத்யமுலு

2 நா தேகமுலு நீகு ஸ்ரீ ரங்கக்ஷேத்ரமுலு
நா சப்தாபரணமுலு நீகு சப்தப்ராகாரமுலு

3 நா ரஜோகுணமுலு நீகு ஹேமசிகரமுலு
நா கர்வமுலு நீகு கருடஸ்தம்பமுலு

4 நா விவேகமுலு நீகு விமானஸ்தானமுலு
நா காமக்ரோதமுலு நீகு சுவர்ணகவாடமுலு

5 நா ஞானவைராக்யமுலு நீகு துவாரபாலகுலைன
ஜயவிஜயுலு
நா புருஷாகாரமுலு நீகு ஆஸ்பதசயனமுலு

6 நா மோஹாஜாலமுலு நீகு பாதார்ச்சன ஸ்ரீ துளஸீ
குஸுமமுலு
நா ஸுகசம்போகமுலு நீகு சந்தனதிலேபமுலு

7 நா மோகமுலு நீகு நவரீத்னகிரீடமுலு
நா ஜாலமுலு நீகு கஸ்தூரிதிலகமுலு

8 நா வசனமுலு நீகு ஸகஸ்ரநாமமுலு
நா பக்திசிரத்தலு நீகு நேனுவேஸின வனமாலலு

9 நா சிரவணகீர்த்தனமுலு நீகு மகரகுண்டலமுலு
நா ஞானேந்திரியமுலு நீகு நீராஞ்சன தூபதீபமுலு

10 நா கோலாஹலமுலு நீகு கண்டாநாதமுலு
நா சுபாசுபமுலு நீகு மஹாநைவேத்யமுலு

11 நா ரஸகந்தமுலு நீகு தாம்பூலமுலு
நா சஞ்சாரமுலு நீகு பிரதக்ஷணமுலு

12 நா சம்போகசயனமுலு நீகு பிரணமமுலு
நா விவகார்முலு நீகு ஸ்தோத்திரமுலு

13 நா சந்தோஷமுலு நீகு கருடாதிவாகனமுலு
நா கர்மேந்திரியமுலு நீகு நிர்த்தகிதவாத்தியமுலு

14 நா ஜாக்ரஸ்வப்னசுஷுப்துலு நீகு சத்ர சாமர ஆலா
வட்டமுலு
அந்தரங்கமுனவீனி கைகொனிநன்னு ரக்ஷிம்பவே
ரங்கேசா

15 நிவர்த்தகா தீனசரண்யா நிகிலஜகமாயா
மோஹாந்தகாரா
ரங்கநாயகி குசகும்பப்ரியா
ஸ்ரீ ரங்கநாதா நமஸ்தே நமஸ்தே நமஸ்தே நம:

ஓம்—பிரம்மார்ப்பிதம்

---

பரதேவி துணை

# ஜீவாத்மா அந்தர்முகமாகி ஆராய்ச்சி செய்து அறிவாகிய் மணியை பரமாத்மா விடம் சமர்ப்பித்தது

வேதாந்த—நொண்டிச்சிந்து.

1 சாந்தநரசிம்மர் பாதத்திலேநான்
சரணமென்றனுதினமும் பணிந்தேன்
சரணமென்றே அடைந்தேன்—

2 பணிந்தபின்பென்னைப் பார்த்தார் தயாபரர்
பறந்ததே எந்தன் கர்மமெல்லாம்
திரும்பியே வாராமல்—

3 தீர்த்தார் ஜன்மத்தை காத்தார் கருணையால்
பார்த்தார் பச்சைமரத் தாணிபோலே
ஆத்தாள் உதரம்விட்டு மாத்தினரே—

4. மாற்றில்லாத மறுபொருளைக் கண்டுநான்
மனது புளகிதமானேனே
மறந்தேன் சரீரந்தன்னை

5 ஆனேன் ஒருவடிவானேன் குருபாதம்
தானே வலுபிடி யானேனே
நானே நளினபதாம்புஜத்தை

6 (பரி)பக்குவமாச்சுதென்று பக்த தயாபரர்
எத்தி முத்திதர நினைத்தாரே
(பரா) சக்தியின் கிருபையினுலே

7 உபநிஷத்வாக்கியம் பொருக்கி என் செவிதன்னில்
உரைத்தார் தாரகத்தை வான்போல
நிறைத்தார் பூரணத்தை

8 உரைத்த அக்ஷரம் பிடித்தேன் அரைக்ஷணம்
குடித்தேன் ஆனந்தகளிப்பானேன்
மதர்த்தேன் மதகரிபோல்

9 பவசாகரத்தை குருசாதனத்தால்
அனயாஸமாகவே கடந்தேனய்யா
ஒரு ஆவின் குளம்படிபோல்

10 ஸ்நானபானம் சந்தியாதி தர்ப்பணங்கள்
சந்ததமும் செய்துகொண்டு வந்தாலும்
பிரம்மம் சந்திக்கவில்லை ஐயா

11 ஆதிசேதுகாசி காவேரி முதலான
அறுபத்தாறுகோடி தீர்த்தங்களும்
ஆடிவந்தேன் அத்மாவைக்காணேன ஐயா

12 முப்பத்துமுக்கோடி மூர்த்திகளையுங்கண்டு
முக்காலும்வளைவந்து துதித்தாலும்
பிரம்மம் கிட்டவுமில்லை ஐயா—

13 அஷ்டாங்கயோக சமாதியிலிருந்து
ஹடயோகத்தினலே ஆராய்ந்தேன்
பிராணயாமத்திலுங் காணேன்—

14 ஸ்தூலசூக்ஷ்மக் காரணாதிக்கோட்டையை
தும்பிபோலப்பறந்து நான் தேடினேனே
ஜகதம்பிகை அருளினாலே—

15 ஒருத்தராலேயும் பிரவேசிக்கக்கூடாத
உபநிஷத்தாகிய காட்டிற்குள்ளே
நானொருவனாய்ஊடாடி நுழைந்தேனையா—

16 பற்பல ஸ்ருதிகள் ஸ்மிருதிகளாகிய
பிரவாகங்களுமங்கே பெருகுதையா
மறுகரைகாண முடியாமல்—

17 (வேத)சாஸ்திரங்களாகின்ற கொடிமுடிவனத்திலே
மேகம்போலேயங்கே வளர்ந்துகொண்டு
வழிமேலேபோகவு மொட்டவில்லை—

18 அறுபத்துநாலு கலைகளாகின்ற
ஆனைகள் மலைபோலே வருகுதையா
கால்வைத்திட இடமுமில்லை—

19 ஜனனமரணமாகின்ற மலைப்பாம்பு
வழியிலேமரம்போல் கிடக்கின்றதே
அதைத்தாண்டிப் போகவுந் தெரியவில்லை—

20 ஸ்வர்க்கநரகமென்ற அற்பப்பிசாசுவந்து
அச்சப்படுத்துவதைக் கண்டுமே நான்
அலக்ஷியஞ் செய்தேனே—

21 (மனு) வசனங்களாகின்ற பக்ஷிகள்வனத்திலே
வாசிபூசிஎன்று கத்திடவே
மனது சூஸ்திரவழி சுற்றிடவே

22 (பல) புராணங்களாகின்ற வண்டுகள் வனத்திலே
பாடிப்பாடிச் செவியில் அடிக்கின்றதே
தேகம் பரவசந் தானச்சே—

23 தத்துவங்களான தொண்ணூற்றாறுகோடிகளும்
சன்னபின்னலாய்ப் படர்ந்துகொண்டு
(தலை) சுற்றுகிறதே சற்றுந்தெரியாமல்—

24. அன்வயவியதிரேக மாகின்றமூங்கிற்
பண்ணைகள் வெகுவாய் வளர்ந்துகொண்டு
தலைசுற்றுகிறதே சற்றுந்தெரியாமல்—

25 இப்படிப்பட்ட இந்த வேதாந்தக்காட்டை
எப்படிநாமுங் கடப்போமென்று
ஏக்கமுந் தானச்சே—

26. அறிவுநீதானென்று உளவுசொன்னார் குரு
அதுவேதிடமாகப் பிடித்துக்கொண்டு
(நான்) அடிமேலடிவைத்து ஆராய்ந்தேன்—

27 சத்சங்கமாகின்ற சாதுக்கள்வழியிலே
சகாயமாகவே கூடிற்றையா
மனதுசந்தோஷமுந் தானச்சே—

28 வனத்துதுர்ச்சங்கம் நடந்து போகும்போது
வந்தாரே அங்கே மதவாதியர்கள்
(வாதயுத்தம்) தந்தாலேவழிவிடுவோமென்றார்—

29 அடுத்தாரென்னையவாள் எதிர்த்தேன் அவாளை
நான்
தொடுத்தேன் அத்வைத சரத்தினாலே
துணித்தேன் அவாள்மதம் தூளிதூளியாய்—

30 ஆறுமதவாதிகளும் வாதுக்குத் தோர்த்துவிட்டு
ஆருக்கும் சொல்லாமலே ஓடினாரே
அவரைதிடஞ்சொல்லி ஜயித்தேனையா—

31 பதார்த்தலக்ஷியார்த்தவிசாரணைபண்ணி நான்
பையப்பைய வழிகடந்தேனே
நான் பண்ணின தபஸினாலே

32 சிரவணமனன நிதித்யாஸனமாகின்ற
சாதனங்களினால் வழிதாண்டி
தத்திப்பற்றி மெல்லப்போகையிலே—

33 ஜீவனீஸ்வரனென்ற இரண்டு இராக்ஷதாள்
ஜனத்துடன் ஓடிவந்து எதிர்த்தார்களே
ஜயிக்க உபாயம் தெரியவில்லை—

34 சத்குருபாதத்து தூளியை சிரசிலே
சந்தோஷமாகவே நான் தரித்துக்கொண்டு
தள்ளினேன் ஸர்வ சத்துராதியரை

35 அகிலஉபாதிகளை மடிய அடித்துவிட்டு
ஆனந்தஅம்புதியில் அமிழ்ந்தேனே
அக்ண்டாகாசமாய் நிரைந்தேனே

36 காலத்ரயங்களும் லோகத்ரயங்களும்
தேகத்ரயம் கவிசாகைகளும்
கங்குகங்காகவே கரைந்ததையா—

37 அக்யானமாகின்ற காயத்துக்குள்ளே
விக்யான அக்கினி போய்விழுந்து
மிக்வுந்தகிக்கத் தொடங்கிற்றையா—

38 பஞ்சகோசங்களும் பஞ்சவிஷயங்களும்
பஞ்சசக்தியும் அரக்குமாளிகையும்
பஞ்சுகள்போலவே எரிந்ததையா

39 ஷட்அரிகள் ஷட்விகாரம், பஞ்சகோசமாகின்ற
சாவடிகளும் உப்பரிகைகளும்
தகர்த்துத் தகனங்களாச்சுதையா

40. ஆதித்யன்முதலான ஐந்துபிரகாசத்தையும்
அதிக்ரமித்துக்கொண்டு ஜொலித்ததையா
பரமாத்மா தேஜஸுடன்

41 நிட்சித்தமாகவே சத்சங்கபலத்தால்
தேஜோமயமான ஆத்மாவைநான்
தன்னுக்குள்ளே கண்டுகொண்டேனையா—

42 முக்தியாகின்ற அம்மனைக்கண்டுநான்
முத்திரைகொடுத்து மணிவாங்கிக்கொண்டு
உத்தரதிக்கில்வர நினைத்தேனையா—

43 ஸம்ஸாரமாகும்விருக்ஷச் சாகை கப்புகள் தன்னைச்
சடசடாயமாக முறித்துவிட்டு
(ஒரு) தெந்தினப்பாட்டையும் பாடிக்கொண்டு

44 ஜனனமரணமென்ற சிந்துவைக்கடந்துநான்
திரும்பிவந்தேனையா இக்கரையில்
ஜீவன்முக்தாளைக்கண்டு(சேதி)சொன்னேனையா

45 மட்டில்லாத ஒரு ஆனந்தங்கொண்டுநான்
மப்புத்தட்டிக் கொக்கரித்துக்கொண்டு
வந்தேன் நான் உம்மிடத்தில்

46 வந்தனம் உம்முடைய பாதத்திலேநான்
தந்தேனே ஆத்ம சூடாமணியை
அடைந்தேனே திருவடியை—

47 பக்தவத்ஸலா சரணமய்யா!
பரமதயாளு சரணமய்யா!
லக்ஷ்மிகாந்தா சரணமய்யா!
ஸ்ரீ நரஸிம்மா சரணமய்யா!
தவத்திற்கதிபா சரணமய்யா!
சுவாமிவெங்கடேசா சரணமய்யா!
குணத்திற்கதிபா சரணமய்யா!
குருவெங்கடேச்வரா சரணமய்யா!

ஓம்—தத்—ஸத்.

---

## திருவிளக்குப் பிரார்த்தனை

1 விளக்கேதிருவே வேதனுட நற்பிறப்பே
ஜோதிவிளக்கே ஸ்ரீ தேவிபெண்மணியே

2 அந்திவிளக்கே அலங்காரப் பெண்மணியே
காந்திவிளக்கே காமாட்சிதேவியரே

3 பசும்பொன்விளக்குவைத்து பஞ்சுத்திரிபோட்டு
குளம்போலநெய்யைவிட்டு கோலமுடன் ஏற்றி
வைத்தேன்

4 பொட்டுமிட்டேன் குங்குமத்தால் பூமாலைசூட்டி
விட்டேன்
ஏற்றினேன்நெய்விளக்கு எந்தன்குடி விளங்க

5 வைத்தேன் திருவிளக்கு மாளிகையுந் தான்விளங்க
மாளிகையில் ஜோதியுள்ள மாதாவைக்கண்டு
கந்தேன்

6 மங்கலியப்பிச்சை மடிப்பிச்சை தாருமம்மா
சந்தானப் பிச்சையுடன் தனங்களையும் தாருமம்மா

7 பெட்டிநிறையப் பூஷணங்கள் தாருமம்மா
...டில் நிறையப் பசுமாடு தாருமம்மா

8 புத்திரடம்பைத்தந்து எந்தன் பக்கத்தே நில்லுமம்மா
அகத்தெளிவைத்தந்தென்னது அகத்தினிலே
வாழுமம்மா

## திருவிளக்கு தேவி ஸ்தோத்திரம்.

9 சேவித்தெழுந்துநின்றேன் தேவிவடிவுகண்டேன்
வஜ்ரக்கிரீடங்கண்டேன் வைடூரியமேனிகண்டேன்

10 முத்துக்கொண்டைகண்டேன் முழுப்பச்சைமாலை
கண்டேன்
சவரிமுடிகண்டேன் தாழமடல்சூடக்கண்டேன்

11 பின்னலழகுகண்டேன் பிறைபோலநெற்றிகண்டேன்
சாந்திடும்நெற்றிகண்டேன் தாயார்வடிவுகண்டேன்

12 குங்கிடும்நெற்றிகண்டேன் கோவைக்கனிவாயுங்
கண்டேன்
செந்தாழைப்பூமடல்போல் செவியிரண்டுங்கண்டு
கொண்டேன்

13 செண்பகப்பூப்போல் திருமூக்குங்கண்டுகந்தேன்
மார்பில் பதக்கமின்ன மாலை அசையக்கண்டேன்

14 காலில்சிலம்புகண்டேன் காலாழிபீலிகண்டேன்
பட்டாடைதானுடுத்தபிடியிடையைக்கண்டுகந்தேன்

15 மங்களநாயகியே உன்னை மனங்குளிரக்கண்டு
கொண்டேன்

அன்பே அருந்துணையே உனையடைந்த எந்தனுக்கு

16 வந்தவினையகற்றி மகாபாக்கியம் தந்தருள்வாய்

தந்தைதாயும்நீயே தற்காக்கும் ரக்ஷகிநீ

17 அந்தத்திற்குதவிநீயே ஆதாரமும் நீயே

உன்னை உறவாகநம்பி உற்றுரைகைவிட்டே[illegible]யே

18 சந்தானம் சௌபாக்யமளித்து சத்துக்கள் [illegible]வை
எனக்களிப்பாய்

பக்தியுள்ள மனதெனக்குத்தந்து பரதேவிகிருபை
யுடனே அருள்வாய்

ஓம்—தத்—ஸத்.

---

## பரதேவதை ஸ்தோத்திரம்.

1 கொத்தருகும் கொன்றைதும்பைசூடும்
கோடிலிங்கர் பாகமுடையவளே
மைக்குழலி மங்கையுமையவளே
வார்காதுப்பணியசையும் வடிவே

2 பொற்கொடியே அடியேனிடர்தீர்ப்பாய்
புகழுடையமுக்திப் பதமளிப்பாய்
கத்தமாஞ்சோதி யொளிகாட்டி
ஐயமானமுக்திப் பதந்தருவாய்

3 கண்டங்கருத்தவர் ஈசரிடத்தில்
கருணையுடன் எனக்குறுதிசொல்வாய்

தண்டம்பணிகின்றேன் போற்றி போற்றி உந்தன்
சின்மயானந்தபதம் தருவாய்

4 பாதகங்கள் தீரவே எனக்கு
பார்த்திடுவாய் உன்கருணை விழியால்
பார்வதியம்மாவென் பாதங்களைப்போக்கி
பரிவுடனே மோக்ஷபதமருள்வாய்

5 (அம்மா) எட்டாததூரத்திலுமிருப்பாய் நீ
என்னுடமனதில் எப்பொழுதுமுள்ளாய்
பக்தரை தேடியழைப்பாய் அவர்கள்
பாபங்கள் சேராமலே ஒழிப்பாய

6 துன்பமென்னும் பவக்கடலில்விழுந்து
தாய்முகங்காணாத பிள்ளைபோல
புலம்புகின்றேன் இந்தக் கர்மபூமியிலே
பெரியோர்கள் தொழுதேற்றும் நாயகியே

7 தாயேசரணம் உன்தாளே சரணம் சங்கரியேசரணம்
மின்னேசரணம் மீனும்பாசரணம் மீனாக்ஷி தேவி
சரணம்
பொன்னேசரணம் பூவேசரணம் பொற்பாதமே
சரணம்
சரணம் சரணம் என்னிடர் தீர்த்து சாயுஜ்யந்
தருவாய்

8 அச்சந்துலைப்பாய் அருளைப்பொழிவாய்
அழியாப்பதமெனக்குஅருள்வாய்
தொப்பைவயிற்றுன் தும்பிக்கையாலென்னை
தூக்கியே கரையில் சேர்த்திடுவாய்